# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ருகூஅகூ | மலர் |
| --- | --- | --- |
| ருச | விளம்பி, ஐப்பசி<br>1958 அக்டோபர், நவம்பர். | எ |


## குறுந்தொகையிற் பாலைபாடிய பெருங்கடுங்கோ.

*திறனாய்வு.*


சாமி. செல்வவிநாயகன்.


முடி மன்னரும் கவிபாடி மகிழ்ந்த காலம் சங்க காலம். சங்க காலத்தில் அரச குலத்தினர் பலரும் அருந்தமிழ் வல்லவராய் விளங்கித் தமிழ்த்தொண்டு செய்தனர். வேறுபாடு பாராது புலவரோடு புலவராய்ப் பழகித் தமிழ்ச் சுவை நுகர்ந்த அப்பெருமக்களுள் பாலைபாடிய பெருங்கடுங்கோவும் ஒருவர். பாலையைப்பற்றிப் பாடி, "பாலை பாடிய" என்ற அடைமொழியைப் பெற்றார் இவர். இவருடைய தம்பியும் பெரும் புலமை பெற்றவர். பாலைத் திணையைப் பாடி அடைமொழி பெற்று இவர் சிறப்புற்றதுபோலவே, இவரது தம்பியாகிய இளங்கடுங்கோவும் மருதத் திணையைப் புனைந்து பாடி "மருதம் பாடிய" என்னும் அடை மொழி பெற்று விளங்கினர். இவ்வாறு அண்ணனும் தம்பியும் அருந்தமிழ்ப் புலவர்களாக ஓங்கி விளங்கினமை பெரிதும் பாராட்டற்குரியது.

இப்புலவர் பெருமகன் பெருங் கொடையாளி. இவர் குறுந்தொகையிற் பத்து பாடல்களையும், நற்றிணையிற் பத்துப் பாடல்களையும் அகத்திற் பதினேரு பாடல்களையும் புறத்தில் ஒரு பாடலையும் அருளியுள்ளார். பாலைக் கலியை இப்புலவர் பெருமகன் மிகப் போற்றத்தக்க முறையில் இயற்றியுள்ளார்.

இவருடைய குறுந்தொகைப் பாடல்கள் மிகச் சிறிய அளவில் இயன்று தேருந்தோறு மினிமை பயப்பன. அவற்றின் திறனை ஈண்டுக் காண்போம்.

தலைவி ஒருத்தி. அவளது அருமைக் கணவன் அரும் பொருளீட்ட அத்தம் நண்ணுகிருன். தலைவனின் நினைவே தலைவி

யைச் சூழ்ந்துள்ளது. உள்ளம் பலவாறு சிந்தித்துப் பதறுகிறது. தான் தன் காதலனை நினைத்து வாடுவதைப்போலவே, தலைவனும் தன்னைப்பற்றி நினைப்பானா என்று நினைக்கின்றது அப்பேதை மனம். நெஞ்சம் துயரத்தில் மிதந்து செல்லுகிறது. வாய்விட்டரற்றுகின்றாள் அவ் வனிதை. அருகில் உள்ள அருமைத் தோழி ஓடோடி வருகின்றாள். தலைவன் சென்ற சுரத்தின் இயல்பை விரித்துத் தேற்றுகின்றாள் தலைவியை. "அழகிய அடியையுடைய கள்ளி நிறைந்த சுரநெறி கடந்து சென்றோர் கள்வர்தம் இரும்பினாற் செய்த அம்பினை செப்பஞ் செய்தற் பொருட்டு உகிர்நுதியிற் புரட்டும் ஒலிபோல சிவந்த காலையுடைய பல்லி தன் துணையை காதலன்பு தவழ அழைப்பதைக் கேட்பர். இவ்வாறிருக்க நம்மை நினையாது இருப்பரோ" என்று ஆற்றுகின்றாள் அவள்.

உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிருங்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

(குறுந்தொகை கசு)

உணர்வோவியத்தை ஐந்தே வரிகளில் தீட்டிக் காட்டுகின்றார் கவிஞர். "உள்ளார் கொல்லோ" என்ற வினா அழுத்தமாக எழுகின்றது. உறுதியை மிக நன்றாகக் காட்டும் இயக்கமாக அமைகின்றது. கள்வர் கணை தீட்டும் ஒலியும் பல்லி துணை பயிரும் ஒலியும் மிகத் தெளிவாகப் பாடலில் கேட்கின்றன. "பயிரும்" என்பதனால் பல்லியின் அன்பான நெஞ்சம் இழைகின்றது; இப்பாடல் தோன்றிய நாளிலிருந்து இவ்வொலிகளை எழுப்பிக்கொண்டே இருக்கின்றது. இனியும் எழுப்பும். "அங்காற் கள்ளி" என்பதனால் கள்ளியின் அடி அழகும் அகிலுண்மையும் தெரிய வருகின்றன. வற்றி வறண்ட பாலை வனமாயினும் அங்கே வற்றாத அன்பு உண்டு. கவிஞரின் வற்றாத புலமை வளத்தால் கவிதை செழித்து வளருகின்றது. பாலை நிலத்தியல்பு மிக அழகாகக் கூறப்படுகின்றது. அஃறிணை உயிர்களின் அன்பைக் காட்டி அறிவுறுத்தும் நல்ல அறிவுத்திறம் படைத்த தோழியை நமக்குக் காட்டுகின்றார் புலவர். பாலை நிலத்துயிரின் இயல்பு மற்றொரு பாலை நில நிகழ்ச்சிக்கு ஒப்பிடப்பட்டுத் தெளிவாக விளங்குகின்றது. உவமை மிக அழகியது. உயர்வு நவிற்சியாக இல்லாதது இதன் மற்றொரு சிறப்பு. "சிறிய அஃறிணை உயிர்களும் இன்பந் துய்க்க நாம் இவ்வாறு பிரிந்து வருகின்றோமே என்ற எண்ணம் தலைவன் நெஞ்சத்தே தோன்றி வினையை விரைவில் முடித்துத் திரும்ப ஊக்கும்" என்று தோழி சொல்லாமற் சொல்லுகின்றாள். "காதல் நெஞ்சம் பிரிவின்கண் பிறரின்பந் துய்ப்பதைக் கண்டு வருந்தும்" என்ற இயல்பு இங்கே மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. எவ்வளவு அழகான பாட்டு!

இவ்வளவு கூறியும் தலைவி ஆற்றினளல்லள். அதனல் தோழி மேலும் தேற்றத் தொடங்குகின்ருள். "நம் தலைவர் மிக நல்லவர். பிடி பசி தீர்க்க, வேழம் யா மரத்தின் பட்டையை உரிக்கும் அன்பு தவழும் வழி அவர் சென்ற வழி" என்று கூறுகின்ருள் அவள்.

"நசைபெரி துடையர் நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர்சென்ற வாறே"

(குறுந்தொகை ௩எ)

தலைவனின் பண்புநலனை விளக்குகின்றது முதலடி. தலைவன் தலைவியிடத்துப் பேரவாப் பூண்டவன். அப்படியாயின் உடல் வெறியால் அவ்வவா எழுந்ததா? அன்று அன்று. அதை விளக்கவே மேலே தோழி தலைவனின் தண்ணளியைக் குறிக்கின்ருள். இதனல் தலைவனின் மாசற்ற தூய பொன்போன்ற அன்பு நெஞ்சம் வெளியாகின்றது யானையின் அன்பு வாழ்க்கையின் மூலமாகத் தலைவன் விரைவில் மீள்வன் வினைமுற்றி, என்ற குறிப்புப் பெறப்பட்டது. பாலை பாடிய பெருங்கோ காட்டும் யானை மிக வலியது. அதைப் "பெருங்கை வேழம்" என்று குறிக்கின்ருர் புலவர். அன்பான பிடி பசித்தது என்பதற்காக, அதன் பசியைத் தீர்த்தற்பொருட்டு மெல்லிய கிளையுடைய யாமரத்தின் பட்டையைப் பொளிக்கின்றது அது. இவ்வாறு உடல்கலந்து முற்றிய உயிரன்பினை யானைகளின் மேல் ஏற்றிக் கவிதையை இழைக்கின்ருர் புலவர். அன்பின் விளக்கு அவ்விலங்கின் வாழ்விலே சுடரிட்டு எரிகின்றது. இத்தகைய அன்புக் காட்சியைக் கண்டபிறகும் தலைவன் நீட்டிப்பானு? விரைவில் ஓடோடி வந்து விடுவான் அன்ருே? மூன்ரும் அடியால் மெல்லிய கிளைகளையுடையது யாமரம் என்று தெரிகின்றது. அங்கே செங்காற் பல்லி தன் துணையை அழைத்தது. இங்கே பெருங்கை வேழம் தன் பிடியின் பசியைக் களைய முயல்கின்றது. எவ்வளவு அழகான காட்சிகள்! மிகக் குறுகிய பாட்டு; மிகச் சிறந்த உணர்வு நிலையின் சிறந்த காட்சி. என்னே இப்புலவரின் திறம்! "பொளிக்கும்" என்ற சொல்லையிட்டு பாட்டை மென்மையுடையதாகச் செய்கின்ருர் புலவர்.

இவ்விரண்டு பாடல்களிலும் தலைவனின் அன்பையும் சுரநெறியியல்பையும் விளக்கும் ஆசிரியர் தலைவன் பிரிந்து போவதற்கு முன்னர் நிகழும் ஒரு நிகழ்ச்சியை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்ருர். நல்ல நாடகக் காட்சி இது.

தலைவன் பொருளீட்டக் கிளம்புகின்ருன். தலைவி கற்பின் செல்வி; தானும் வருவதாகச் சொல்லியும் தலைவன் ஏற்றிலன். தலைவி வரமுடியாதவாறு இன்னுத இயல்பினையுடையது பாலை நிலம் என்று பகருகின்ருன். அருகில் இருந்த தோழி ஆத்திரத்துடன் வினவுகின்ருள், "பெருங்காடு கொடியது என்றீர். அப்படியாயின் உம்மை நீங்கி வீட்டகத்து இருப்பது தலைவிக்கு இனியதோ" என்று.

"உமணர் சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்காடு
இன்னு வென்றீர் ஆயின்
இனியவோ பெரும தமியோர்க்கு மனையே"

(குறுந்தொகை கஉச)

கற்பென்னும் திண்மை உண்டாகப் பெற்ற பெண்ணுலகத்தின் துடிப்பு இது. உணர்ச்சி மிக அழகாகப் பொங்கி வழிகின்றது. "பெரும" என்று விளித்ததனல் "நின் தகவுக்கு இவ்வாறு கூறல் அழகல்ல" என்னும் குறிப்புத் தோன்றுகின்றது. "இனியவோ" என்னும் எதிர்மறை வினு பல உணர்ச்சி நிறங்களைப் பிரதிபலிக்கின்றது. "இவ்வில்லத்தே பிரிந்திருப்பது எம்மால் ஆகாது. நீர் இன்னுதது என்று சொல்லினும் நாங்கள் அமையோம். உம்மொடு வந்தால் அவ்வெம்பாலையே இனிது" என்று முடிந்த முடிபாக நிலைநாட்டுகின்ருள் தலைவி. கற்புத் தகளி ஒளிவீசி விளங்கும் பாடல் இது.

இப்பாடலினுல் உமணர்கள் சேர்ந்து தங்கிச் செல்வர் என்று தெரிகின்றது. உமணர் குழுமி இருந்த இடம் மிகப்பொலிவாக இருக்கும்போலும்! இது அவர்கள் செல்வ வளத்தினை உணர்த்திற்று. "உமணர் சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்றலை ஊர் பாழ்த்தன்ன ஓமையம் பெருங்காடு" என்பதில் உவமை, நலங் கொண்டது. மேலும் காட்டில் வளரும் ஓமையின் இயல்பு கூறப் பட்டது. நுட்ப நாகரிகம் உணர்வுடன் சிறந்த தமிழ்ப் பண் பாட்டை உலகத்திற்கு எடுத்துக்காட்டும் ஒளிமிக்க பாடல் இது.

அடுத்தது, தலைவன் பிரியுமென வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது. தோழியின் அறிவு அவ்வுரையினுல் விளங்கு கின்றது. தலைவனின் சொற்களையே மேற்கோளாக ஆளுகின்ருள் அவள். அத்திறம் பெரிதும் வியத்தற்குரியது. "வினை ஆடவர்க்கு உயிர்போன்றது; ஆடவர் வீட்டிலிருக்கும் பெண்கட்கு உயிர் போன்றவர்" என்று தலைவன் சொன்னுனும்! ஒருவனுடைய சொற்கள் அவனுடைய பண்பு நலனை உறுதிப்படுத்தும். இவை தலைவனின் சொற்கள். இச்சொற்கள் தலைவனை, உணர்ந்து தெளிந்து ஓங்கிய மனத்தனுக, கடமை தெரிந்த பேராண் மகனுகச் சித்தரிக்கின்றன. "வினையே ஆடவர்க் குயிரே" என்பது வினை யைத் தவிர வேருென்றும் பெருஞ்சிறப்புடையன அல்ல என்பதனை உணர்த்திற்று. வினையே ஆடவர்க்குயிர் என்பதனுல் தலைவன் செலவு இன்றி வாழ்வு அமையாமையை உணர்த்தினுன். மனையுறை மகளிர் பிரிவினுல் வருந்துவர் என்பது அவனுக்குத் தெரியும். ஆடவர் மகளிர்க்கு உயிர்போன்றவர் என்று கூறியமையால் இது பெறப்பட்டது. அவரவர் கடமையை அவரவர் செய்தே ஆக வேண்டும். இதையெல்லாம் கூறி, தான் பிரியப்போவதை உணர்த்தி னுன் அவன்.

பெண்ணுள்ளம் வேறுவிதமாக சிந்திக்கின்றது. "வினையே ஆடவர்க்குயிரே" என்றமையை அது மறந்துவிடுகின்றது. "மகளிர்க்கு ஆடவர் உயிர்" என்பதனை மட்டும் அது எடுத்துக் கொள்கின்றது. இவ்வாறு உரைத்த தலைவர் நம்மை விட்டகலார் என்று தலைவியைத் தேற்ற முயல்கின்றது. இவ்வாறு வேறுபட்ட நெஞ்சவியல்பை சித்தரிக்கும் புலமைப் புரவலரின் திறன் மிகப்பெரிதாகும்.

"வினையே ஆடவர்க்குயிரே" என்பது எவ்வளவு அழகான மணிமொழி! இம்மணிமொழி ஒவ்வொரு தமிழ் மகன் வாயிலும் புகுந்து புறப்படவேண்டும். "உத்தியோகம் புருச இலட்சணம்" என்பதை நாம் பெரும் பழக்கத்தில் வைத்திருக்கிறோம். இதைவிட "வினையே ஆடவர்க்குயிர்" என்பது பொருட் பண்பு நிறைந்தது. இலட்சணத்திற்கும் உயிருக்கும் வேறுபாடு உண்டல்லவா? "உத்தியோகம் புருச இலட்சணம்" என்பது ஒழிந்து "வினையே ஆடவர்க் குயிர்" என்பது பேராட்சிக்கு வரும் நாள் எந்நாளோ? அறிகிலேம். ஓர்ந்து செயற்படுக.

இது பாடல்:

"வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவர் உயிரென
நமக்குரைத் தோருந் தாமே
அழாஅல் தோழி அழுங்குவர் செலவே"

(குறுந்தொகை கஹ௬)

இப்பாடல் மிக இசைநயத்துடன் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

---

## திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

### அறுபதாம் ஆண்டுவிழா.

முத்தமிழ்க்காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் அறுபதாம் ஆண்டு பிறந்தநாள் விழா வருகிற நவம்பர் மாதம் 11-ஆம் தேதி திருச்சியில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவிற்குச் சென்னை மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

முத்தமிழ்க் காவலரின் முதல் மருமகன் திரு. ஓ. அமிர்தராஜன், எம். ஏ., பி. எல்., அவர்கள் தமிழகப் பெருமக்கள் அனைவருடைய வாழ்த்துரைகளும் அடங்கிய "அன்பர்தம் அகமலர்க்கோவை" ஒன்றை விழாவில் வழங்குவார்.

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தினர் தமிழ்ப் பேரறிஞர்கள் பலரிடமிருந்து கட்டுரைகளைத் திரட்டி அச்சிட்ட மணிவிழா மலர் ஒன்றை விழாவில் வழங்குவர்.

# இரவுக் காலம்.

திரு. அடிகளாசிரியர், புலவர் கல்லூரி, கரந்தை.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது..........தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்ருர். வெளிச்சம் உண்டாயிற்று..........தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார்; இருளுக்கு இரவு என்று பேரிட்டார்" என்று கிறித்துவ வேத நூலாகிய ஆதியாகமத்தில் படிக்கிருேம். அதில் 'ஆழத்தின்மேல் இருள் இருந்தது' 'தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்ருர்' என்று கூறப்பட்டிருப்பதுகொண்டு இருள் தேவனுல் படைக்கப்பட்டதன்று என்றும், அது வெளிச்சத்திற்கு முன்னரே இருந்ததென்றும் அறிந்து கொள்ளுகின்ருேம்.

தருக்க சங்கிரகத்தில் "பொருள்—நிலம், நீர், தீ, காற்று, வானம், காலம், திசை. ஆன்மா, மனம், என ஒன்பதே எனத் தேற்றேகாரமிட்டுக் கூறப்பட்டுள்ளது. அதன் உரையுள், இருள் பத்தாம் பொருள் ஆதலின் பொருள் ஒன்பதே என்று கூறல் எங்ஙனம் பொருந்தும்? என்ற வினவை எழுப்பிக்கொண்டு, இருள் ஒளியின் இன்மை வடிவ (அபாவ ரூப)மாதலின் அது பொருளன்று; ஆகையால் பொருள் ஒன்பதே என்று விடை கூறப்பட்டுள்ளது. அதனுல் தருக்க நூலார் இருளை ஒரு பொருளாக எண்ணிலர் என்பது விளங்கும்.

ஞாயிற்றின் ஒளி விளங்குங் காலத்தைப் பகற் காலம் என்றும், அது விளங்காத காலம் இருளாயிருத்தலால் இரவுக் காலமென்றும் வழங்குகின்ருேம். இங்ஙனம் ஞாயிருகிய ஒன்றே தான் விளங்கி இருளைப்போக்குவதாலும் அது மறைந்து இருளை ஆக்குவதாலும் பெரியோர்,

"ஆரிருளும் புலப்படுப்பான் அவனேஎன் றுலகறியப்
பாரகலத் திருள்பருகும் பரிதியஞ் செல்வகேள்"

(தொல்காப்பியம்-செய். பேராசிரியர் உரை)

என்று கூறலாயினர்.

இரவு, பகல் முதலான காலப்பொருள்களையெல்லாம் தமிழிலக்கண நூலார் அஃறிணைப் பொருள்களாகக் கருதி, அவற்றைக் குறிக்குஞ் சொற்களையெல்லாம் அஃறிணை ஒன்றன்பால் பலவின் பாலாகக் கருதினர்.

வடமொழி இலக்கண நூலார் பொருள்பற்றிப் பால் கூருது குணத்தை அடிப்படையாகக்கொண்டு, சொற்களையே ஆண் பெண் அலி என்று பால் வகுப்பாராதலின், காலத்தைக் குறிக்குஞ் சொற்களில் சிலவற்றை ஆண்பாலாகவும் சிலவற்றைப் பெண்பாலாகவும் சிலவற்றை அலிப்பாலாகவும் வகுத்துள்ளனர். பகலைக் குறிக்கும் சொற்களில் சில ஆண்பாலாக இருக்கும்; சில அலிப்பாலாக இருக்கும். ஆனல் இரவைக் குறிக்குஞ் சொற்கள்மட்டும் வடமொழியில் பெண்பாலாகவே வழங்கப்படுகின்றன.

சர்வரீ, நிசா, நிசீதிநீ, ராத்ரி, த்ரியாமா, க்ஷணதா, க்ஷபா, விபாவரீ, தமஸ்விநீ, ரஜநீ, யாமிநீ, தமீ, தமா என்னும் இவை பொதுவாக இரவிற்குப் பெயர். 'ஜ்யௌத்ஸ்நீ' என்னுஞ் சொல் நிலவொடு கூடிய இரவிற்குப் பெயர். 'தமிஸ்ரா' என்பது இருளொடு கூடிய இரவிற்குப் பெயர். இவ்வெல்லாச் சொற்களும் பெண்பாற் சொற்களே.

தமிழில் திங்களின் ஒளியுடன் கூடிய இரவிற்கு எல்லி என்று பெயர். (எல்—ஒளி) 'எல்லி வருநர் களவிற்கு நல்லை யல்லை நெடுவெண் ணிலவே' என்னும் பழம்பாட்டுள் எல்லி அப்பொருட்டாதலை நோக்குக. "... ... ... ... ... ... குணமுதல்
நாள்முதிர் மதியம் தோன்றி நிலாவிரிபு
பகல்உருவு உற்ற இரவு"

என்று நிலவொடு கூடிய இரவு மதுரைக் காஞ்சியுள் கூறப்படுவதை நோக்குக. 'அல்' என்பது பொதுவாய் இரவிற்கும், சிறப்பாய் இருளொடு கூடிய இரவிற்கும் பெயராகும்.

தமிழிலக்கியங்களில் இரவினை உருவகம் என்னும் அணியுள் வைத்துப் புனைந்து கூறும்பொழுது உயர்திணைப் பெண்பால், ஆண்பாலாகவும், அஃறிணைப் பொருள்களாகவும் அது கூறப்பட்டுள்ளது. அங்ஙனமிருக்கச் சிலர், இரவு பெண்பாலாகக் கூறப்பட்டுள்ள இடங்களில், இரவினைப் பெண்பாலாகக்கொண்ட வடமொழி மரபு பற்றியே இங்ஙனம் கூறப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர். இக்கூற்று இரவு ஆண்பாலாகவும் அஃறிணைப் பொருள்களாகவும் கூறப்பட்டுள்ள இடங்களில் பொருந்தாதென்பதை அவர் சிறிதும் நோக்கிலர். அவ்வாறு கூறப்பட்டுள்ள இடங்களில் சிலவற்றைத் தருகிறேன்.

இராமாயணக் கதையை நாம் அறிவோம். கைகேயியின் அரண்மனையில், இராமன் முடி சூடிக்கொள்ளாமல் காட்டுக்குப்போக நேர்ந்த ஊழ்வினையை எண்ணி மனம் வருந்தித் தசரதன் பெருந் துன்பத்தோடு கிடக்கின்றான். நீண்ட நாளாக உடல் வேறு உயிரொன்று என்று கூறும்படி தசரதனுடன் காதல் வாழ்க்கை வாழ்ந்த கைகேயி தசரதன் துன்பத்துக்கோ இறப்புக்கோ சிறிதும் அஞ்சாமல் கூற்றுவன்போல் அவன் முன்னே உள்ளாள். அப்பொழுது கங்குல் நீங்கிப் பொழுது புலர்கின்றது. இந்நிகழ்ச்சியைக் கற்பனைக் கவியாகிய கம்பர் கீழ்வருமாறு கூறுகின்றார்.

சேண்உ லாவிய நாள்எ லாம்உயிர்
ஒன்று போல்வன செய்துபின்
ஏண்உ லாவிய தோளி னன்இடர்
எய்த ஒன்றும் இரங்கிலா
வாள்நி லாநகை மாத ராள்செயல்
கண்டு மைந்தர்முன் நிற்கவும்
நாணி னள்என ஏகி னள்நளிர்
கங்குல் ஆகிய நங்கையே.

இப்பாட்டுள் கங்குல் உயர்திணைப் பெண்பாலாகக் கூறப்பட்டுள்ளது.

பெரிய புராணத்துள் வன்றொண்டர் வரலாறு கூறப்படுமிடத்து, வன்றொண்டர் பரவை நாச்சியாரைத் திருவாரூர்க் கோயிலில் முதன்முதல் கண்டு காதலித்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் அழகாகக் கூறிவிட்டுப், பின் அன்றிரவு நிகழ்ச்சியைக் கூறும்பொழுது,

"மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்தினால்
இறும ருங்குலார்க் கியார்பிழைப் பாரென்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவல் என்னமு கிழ்த்தது வெண்ணிலா"

என்று கூறுகின்றார். இப்பாட்டுள் கங்குல் உயர்திணைப் பெண் பாலாகக் கூறப்பட்டுள்ளது.

வில்லி பாரதத்துள் கண்ணபிரான் பாண்டவர்க்காகத் தூது சென்று அத்தினாபுரியில் தங்கியிருந்த காலத்தில் வில்லிபுத்தூராழ் வார் இரவினைப் புனைந்து கூறும்பொழுது,

"குளிரு மாமதி முகத்தொளிர் குமுதவாய் மலர்த்தித்
தவள வாள்நகை பரப்பிவண் சததள மலர்க்கை
அளவி லேகுவித் தளியொடு மகன்றிலா மையினால்
களிகொள் தோள்விலைக் கணிகையைப் போன்றதக் கங்குல்"

என்று கூறுகிறார். இப்பாட்டுள் கங்குல் பரத்தை என்னும் பெண் ணாகக் கூறப்பட்டுள்ளது.

கந்த புராணத்துள் காசிப முனிவன் தன் முன் வந்து தோன்றி மறைந்த மாயை என்னும் பெண்ணை எண்ணிப் புலம்பிய செய்தி யைக் கூறுமிடத்துக் கச்சியப்ப சிவாச்சாரியர்,

"வண்டுழாய் மோலி மைந்தன்
மாலிருள் கங்குல் வேழத்(து)
எண்தரு வதனம் பட்ட
இரும்புகர்ப் புள்ளி என்ன
அண்டர்தம் தருக்கள் சிந்தும்
அணிமலர் என்ன வான்தோய்
கொண்டலில் படுமுத் தென்னத்
தாரகை குலவிற் றன்றே"

என்று இரவை அஃறிணைப் பொருளாகிய வேழமாகவும்,

"இரவெனும் வல்லோன் ஞாலம்
என்பதோர் உலையில், வேலைக்
கரியுறு வடவைத் தீயில்
களங்கொடு வெண்பொன் சேர்த்தி
விரைவொடு செம்மை செய்து
மீட்டுமோர் மருந்தால் தொல்லை
உருவுசெய் தென்னச் செங்கேழ்
ஒளிமதி வெளிய ஞான்.

என்று இரவை ஆண்பாலாகவும் கூறியுள்ளார்.

# வாழ்வும் வழிபாடும்.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனார்.

பண்டைத் தமிழ் மக்கள் இவ்வுலக வாழ்வையே பெரிதாக மதித்து வந்தனர். இவ்வுலகத்தில் இன்புற்று வாழ்வதே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். உலகிற் பிறந்த எல்லா மக்களும் இன்புற்று வாழவேண்டும் என்பதே அவர்கள் கொள்கை. அறநெறியிலே, பொருளீட்டி, இன்பம் பெற்று வாழவேண்டும் என்பதே அவர்கள் கருத்து. பண்டைத் தமிழ் நூல்கள் அனைத்தும், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்களைப்பற்றித் தான் மொழிகின்றன; இம்முப்பொருள்களைப்பற்றியே செய்யுட்கள் அமையவேண்டும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். சங்க இலக்கியங்களிலே அறம் பொருள் இன்பங்களைப்பற்றிய பாடல்கள் தாம் காணப்படுகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாடல்கள் தமிழ் மொழியில் அமைந்திருக்கின்றன. பாரதநாட்டு மொழிகளிலே, வடமொழியைத் தவிர, பழம்பாடல்களைப்பெற்றிருக்கும் சிறப்பு தமிழ் மொழி ஒன்றுக்குத்தான் உண்டு. பாரதநாட்டில் வழங்கும் வேறு எம்மொழியிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாடல்களோ, நூல்களோ இல்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தோன்றிய வேறு எம் மொழி நூல்களிலும், பாடல்களிலும் மக்கள் வாழ்க்கையை மட்டும் குறிக்கோளாகக் கண்ட கருத்துக்களைக் காணமுடியாது. இது பன் மொழிப் பயிற்சியுடையவர்கள் கண்ட உண்மை.

சங்க நூல்கள் என்று கூறப்படுகின்றவைகள் எல்லாம் தனிப் பாடல்களின் தொகுப்புத்தான். பழந்தமிழ் நூல்களிலே, முழு நூலாக முதலில் பிறந்த நூல்—ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்ட, ஒப்பற்ற நூல்—திருக்குறள் ஒன்றுதான். அது மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டும் சிறந்த நூல் என்பதை உலகம் ஒப்புக்கொண்டு பாராட்டுகின்றது. அந்நூலும் பழந்தமிழர் கொள்கையை ஒட்டி அறம், பொருள், இன்பங்களைப்பற்றியே கூறிச்செல்கின்றது. இவ்வுலகில் மக்கள் சிறந்து வாழ்வதற்கான வழியையே காட்டுகின்றது. இதுதான் பழந்தமிழர் பண்பாடு.

காதல் வாழ்வைப்பற்றி அகப்பொருள் நூல்களிலே காணலாம். அறநெறியிலே பொருளீட்டவேண்டும்; மனமொத்த ஆடவரும்

---

200ஆம் பக்கத் தொடர்ச்சி

இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது இரவுக்காலத்தைத் தமிழ்ப்புலவர் வடமொழி முறைபற்றிப் பெண்பாலாகக் கூறினரல்லர் என்பதும், உருவகம் என்னும் அணியுள் வைத்து அக்காலத்தைப் பெண்ணாகவும் ஆணாகவும் அஃறிணைப் பொருளாகவும் கூறினர் என்பதும் அறியத்தக்கனவாம்.

பெண்டிரும் கூடி இல்லறம் நடத்தவேண்டும்; வறியோருக்கும், விருந்தினர்க்கும் உதவவேண்டும்; பிள்ளைகளைப் பெற்று மகிழ வேண்டும்; என்ற கருத்துக்களை அகப்பொருள் நூல்களிலே காண்கின்றோம். மக்களின் இத்தகைய சிறந்த வாழ்வைக் காப்பதற்காகவே நல்ல அரசியல் அமைப்பையும் விரும்பினர். பண்டைத் தமிழ் நூல்கள் இவ்வாறு காதலைப்பற்றியும், அரசியலைப்பற்றியும் கூறியிருப்பதைக்கொண்டே அவர்களின் சிறந்த நாகரிகத்தை அறியலாம். இவ்வுலகில் எல்லா மக்களும் இன்புற்று வாழ்வது ஒன்றே அவர்களுடைய குறிக்கோள் என்பதைக் காணலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாடப்பட்ட ஒரு சிறு செய்யுளைக் காண்போம். அது பாண்டியன் அறிவுடைநம்பி என்னும் புலவனால் பாடப்பட்டது. அதில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழர்களின் எண்ணம் அப்படியே காணப்படுகின்றது.

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெரும் செல்வர்ஆயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்,
நெய்உடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே.

என்பதுதான் அப்பாடல். இது புறநானூற்றின் 188-வது பாடல். இப்பாடலில் இவ்வுலக வாழ்வு இன்பத்தைத் தவிர வேறு எதுவும் கூறப்படவில்லை.

"பல செல்வங்களையும் பெற்றவர்; அச்செல்வத்தைப் பலரோடும் கூடி அனுபவிப்பவர்; பலருக்கும் உணவிட்டுத் தாமும் உண்பவர்; மிகப்பெரும் செல்வர். ஆயினும் அவர் மகிழத்தக்க செல்வம் மற்றொன்று உண்டு. காலம் தாழ, மெதுவாக நடந்து, சிறிய கையை நீட்டிக் கலத்திலே கிடக்கும் உணவைத் தரையிலே போட்டும், அதைக் கையால் தோண்டியும், கவ்வியும், அளாவியும், நெய் கலந்த அந்த உணவை உடம்பிலே படும்படி உதறியும், பெற்றோர் உள்ளத்தை மயக்கும் தன்மையுள்ளவர்கள் மக்களேயாவர். அத்தகைய மக்களைப் பெருதவர் தம் வாழ்நாளில் பயன்பெருதவர் ஆவார். அவர் வாழ்நாள் வீண் நாள்தான்." இதுவே இப்பாட்டின் பொருள். இதில் இவ்வுலகம் இன்பம் ஒன்றுதான் குறிக்கப்பட்டுள்ளது. அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் இச் செய்யுள் எடுத்துக்காட்டுகின்றது.

பல செல்வங்களையும் தேடிச் சேர்க்கவேண்டும்: இது பொருள். அச்செல்வத்தின் பயனைப் பலரும் நுகரும்படி செய்யவேண்டும்: இது அறம். மனையாளோடு கூடி மக்களைப்பெற்று மனமகிழ்ந்து வாழவேண்டும்: இது இன்பம். இதுபோன்ற தமிழ்ப் பாடல்கள் எண்ணற்றவைகளைப் பெற்றிருக்கின்றோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இத்தகைய பாடல்கள் தமிழ் மொழியில் அமைந்திருப்பதைக்கண்டு பன்மொழி பயின்றவர்கள் வியப்புறுகின்றனர். வேறு எந்நாட்டினும், எம்மொழியினும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இத்தகைய பாடல்களைக் காண முடியவில்லை என்று கூறுகின்றனர். தமிழர்களின் ஒப்பற்ற நாகரிகத்திற்கு இதுபோன்ற பாடல்களே சான்ருக நிற்கின்றன.

இத்தகைய நாகரிகம் பெற்ற தமிழர்களிடம், பலவகைப்பட்ட தெய்வ வணக்கங்கள் இருந்தன; அத்தெய்வங்களை அவர்கள் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப வணங்கி வழிபாடு செய்தனர்; என்பது உண்மை. அவர்கள் பல தெய்வங்களை வழிபட்டதன் கருத்து என்ன? இவ்வுலக இன்பத்தையே பெரிதும் குறிக்கோளாகக் கொண்ட மக்கள் தெய்வ வழிபாட்டைப் பின்பற்றியதற்குக் காரணம் என்ன? இக்கேள்விகளுக்கு சங்க இலக்கியங்கள் தெளிவாக விடையளிக்கின்றன; பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், பண்டைத் தமிழர்களின் நம்பிக்கைகளிலும், பழக்க வழக்கங்களிலும் இக்கேள்விகளுக்கான விடையைக் காணலாம்.

## வழிபடு தெய்வம்.

பண்டைத் தமிழ் மக்கள் தனித்தனியே அவரவர்கள் விரும்பிய தெய்வங்களை வணங்கி வந்தனர். அவர்கள் ஒன்றுகூடிக் குறிப்பிட்ட தெய்வத்தைக் கொண்டாடினர். அவர்கள் தங்கள் விருப்பப்படி தனித்தனியே வணங்கிய தெய்வத்தை வழிபடு தெய்வம் என்று அழைத்தனர்.

அழிவுஇல முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண் கண்டாஅங்கு

"அழியாத செயலைச் செய்ய முயலுகின்ற ஆசையுள்ள மக்கள், தாங்கள் வழிபடும் தெய்வம், தமக்கு உதவுவதற்காகத் தம் கண் முன்னே வந்ததைக் கண்டதுபோல" என்பது நற்றிணை 9-வது பாடல். இதில் தங்கள் முயற்சிக்குத் துணைவேண்டியே தெய்வத்தை வழிபட்டனர் என்ற கருத்தைக் காணலாம்.

வழிபட்ட தெய்வந்தான் வலிஎனச் சார்ந்தார்கண்
கழியும் நோய் கைம்மிக அணங்காகியதுபோல

"தம்மைக் காக்கும் என்று எண்ணி வழிபாடு செய்யப்பட்ட தெய்வமே, தம்மைச் சரணுக அடைந்தவர்களை மிகவும் வருந்தும்படி துன்புறுத்தியதுபோல" என்பது நெய்தற்கலி 16-வது செய்யுள்.

இதிலும், தம்மைப் பாதுகாக்கவேண்டியே தெய்வத்தை வழிபட்டனர் என்ற உண்மையைக் காணலாம்.

## வெற்றிக்காக வேண்டுதல்.

வீரர்கள் வெற்றியின்பொருட்டுக் கொற்றவை என்னும் தெய்வத்தை வணங்கி வந்தனர்.

மறம்கடை காட்டிய துடிநிலை; சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப்புறனே.

"போரிலே வெற்றிபெற்றவர்கள் உடுக்கையடித்து வெற்றியைக் கொண்டாடுவதும்; அவ்வெற்றியைத் தந்த கொற்றவையின் சிறப்பை எடுத்துப் புகழ்ந்து கொண்டாடுவதும், வெட்சித்திணையைச் சேர்ந்ததாகும்" என்பது தொல்காப்பியப் புறத்திணை இயலின் 59-வது நூற்பா.

"இதனானே, வருகின்ற வஞ்சித்திணைக்கும் கொற்றவைநிலை காரணமாயிற்று; தோற்றோர்க்குக் கொற்றம் வேண்டியும், வென்றோர்க்கு மேற்செல்லும்கால் கொற்றம் வேண்டியும் வழிபடுவராதலின்"—

இது மேலே காட்டிய நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம். இதனால், போரிலே வெற்றிபெற உதவும் தெய்வம் கொற்றவை என்பதை அறியலாம். வெற்றி பெற்றோரும், மேலும் வெற்றி வேண்டிக் கொற்றவையைப் போற்றுவர். தோற்றோரும் வெற்றி வேண்டிக் கொற்றவையை வழிபடுவர்.

இந்தக் கொற்றவை வழிபாட்டின் கருத்தைச் சிலப்பதிகாரத்திலே தெளிவாகக் காணுகின்றோம்.

"அம்பு விடும் வில்லைக் கையிலே கொண்ட மறவர்குடியிலே பிறந்தவள்; உரிமையுடையவள்; முன்பு வேண்டிக்கொண்ட கடனைப்பெற்றவள்; கொக்கரிக்கின்ற வாயை உடையவள்; தெய்வம் வந்து ஆடும் சாலினி என்பவள்—தெய்வ ஆவேசங்கொண்டாள். உடம்பின் மயிர் சிலிர்த்தாள்; கைகளை உயர்த்தி வீசினாள். மறவர்கள் வியக்கும்படி, அவர்கள் கூடியிருக்கும், வேலியிட்ட அவ்வூர் மன்றத்திலே, அடிபெயர்த்து ஆடினாள். அவள், கல் என்று ஒலித்துக்கொண்டிருக்கும் உங்கள் பகைவர்களின் ஊர்களிலே பசுநிரைகள் சிறந்திருக்கின்றன; வலிமையான வில்லையுடைய மறவர்களின் மன்றுகள் பாழடைந்தன; மறவர் குடிகளுக்கு உரிமையான வழிப்பறிக்கொள்ளையால் வரும் செல்வம் பெருகவில்லை; அறநெறியிலே வாழுங்குடியினர்போலச் சினங்குறைந்து செருக்கின்றி வாழ்கின்றனர். கொற்றவையை வழிபாடு செய்யாத காரணத்தால் இந்நிலைமை ஏற்பட்டது. மானை வாகனமாகக்கொண்ட கொற்றவை, தான் பெறவேண்டிய கடனைப் பெற்றால்தான், மறவர்களுக்கு வில்லால் உண்டாகும் வெற்றியைத் தருவாள்; இன்றேல் தரமாட்டாள். கள்ளுண்டு களிக்கின்ற வாழ்வை விரும்புவீர்களாயின், களவாடி உண்ணும் வாழ்க்கையை உடையவர்களே! கொற்றவைக்குரிய கடனைக்கொடுங்கள் என்று அந்தச் சாலினி ஆடினாள்" என்பது சிலப்பதிகாரம் வேட்டுவரியில் காணப்படுவது. இதனை வேட்டுவரியின் 6 முதல் 19 வரையில் உள்ள அடிகளிலே காணலாம்.

கானவர்கள், தங்கள் வாழ்க்கை மேம்படக் கொற்றவையை வழிபட்டனர்; கொற்றவைக்கு பூசைபோட்டு விழாவெடுக்கும் வழக்கத்தைக்கொண்டிருந்தனர் என்பதைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

## மழைக்கு வேண்டுதல்.

மழையில்லாவிட்டால் தெய்வத்தை வேண்டி விழாவெடுப்பர்; மழை மிகுதியாகப் பெய்தாலும், அது நிற்கும்படி தெய்வத்தை வேண்டிக்கொள்வர். இவ்வழக்கம் தமிழ் மக்களிடம் இருந்தது.

மலைவான் கொள்கென உயிர்பலி தூஉய்,
மாரி ஆன்று, மழைமேக்கு உயர்க,எனக்
கடவுள் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய உவகையர்

"மலையிலே மேகங்கள் சூழ்ந்து மழை பெய்கவென்று மிகுந்த பலி கொடுத்து வணங்குவர். அதனால் மிகுந்த மழை பெய்யும். அந்த மழை அடங்கவேண்டும்; மேகங்கள் மேலே போய்விட வேண்டும்; என்று தெய்வத்தை வேண்டுவர். அதனால் மழை பெய்யாமல் நின்றுவிடும். இதுகண்டு குறவர்கள் மிக்க மகிழ்ச்சியடைவர்" என்பது புறநானூறு 143-வது பாட்டு.

இதனால் மழை பெய்யவும், மழை நிற்கவும் தமிழ் மக்கள் தெய்வத்தை வேண்டியதைக் காணலாம்.

இந்திர விழாக் காலத்திலே, காவிரிப்பூம்பட்டினத்திலே உள்ள காவல் பூதத்தைப் பெண்கள் பூசையிட்டு வணங்குவார்கள். அவர்கள் தமது நாட்டிலிருந்து பசி, நோய், பகைகள் ஒழியவேண்டும்; மழையும், செல்வமும் பெருகவேண்டும்; என்று வேண்டிக்கொள்வார்கள். இச்செய்தி சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது.

காவல் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
புழுக்கலும், நோலையும், விழுக்குடை மடையும்,
பூவும், புகையும், பொங்கலும் சொரிந்து,
துணங்கையர், குரவையர், அணங்கெழுந்து ஆடிப்,
பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும், பிணியும், பகையும் நீங்கி,
வசியும், வளனும், சுரக்கென வாழ்த்தி,
மாதர்க் கோலத்து வலவையின் உரைக்கும்
மூதில் பெண்டிர் ஓதையில் பெயர்.

"காவல் பூதத்தின் பலி பீடத்திலே, அவரை, துவரை முதலிய சுண்டல்கள், எள்ளுருண்டை, மாமிசம் கலந்த சோறு, மலர், புகை, கள், இவைகளை வைத்துப் படைப்பர். துணங்கைக் கூத்தாடுவர்; குரவைக் கூத்தாடுவர்; தெய்வ ஆவேசம் பொருந்தி ஆடுவர். 'சோழனது பெரிய நாடு முழுவதும், பசி, நோய், பகையின்றி வாழ்க; மழையும், செல்வங்களும் மிகப் பெருகுக' என்று வாழ்த்துவார்கள். மறக் குடியிலே பிறந்த பெண்கள், அழகிய கோலங்கொண்டு, இவ்வாறு திறமையுடன் கூறி ஓசையிட்டுப் போவார்கள்."

இந்தச் சிலப்பதிகார அடிகள், தமிழ் மக்கள் தெய்வத்தை வழிபட்ட காரணத்தைக் கூறுகின்றன. பசியில்லாமல் வாழ —

நோயின்றி வாழ — பகைவர் பயம் இன்றி வாழ — மழை பெய்ய — செல்வம் பெறத்—தெய்வத்தை வேண்டினர். மழை வளம் வேண்டியே—நாடு நன்ருக வாழ வேண்டியே—பண்டைத் தமிழகத்தில் இந்திர விழா நடந்தது என்பதையும் காணலாம்.

அகப்பொருட் பாடல்களிலே முருக வழிபாடு காணப்படுகின்றது. தன் மகளின் உடல் சோர்ந்திருப்பதைக் காணும் தாய் வருந்துகின்ருள். தன் மகளின் உள்ளத்திலே கவலே குடிகொண்டிருக்கின்றது. அவள் தன் தோழிமார்களுடன் கலகலப்பாக உரையாடவில்லே; அவர்களுடன் சேர்ந்து விளேயாடவும் இல்லே; என்னவோ ஒரு மாதிரியாகப் பித்துப்பிடித்தவள்போல் விழித்துக்கொண்டிருக்கின்ருள். உடலின் இளேப்பால் அவள் கை வளேயல்கள் தாமே கழன்று விழுகின்றன. நாளுக்குநாள் இளேத்துப்போகின்ருள். மகளுடைய இந்த நிலேக்குக் காரணம் அவள் தன் காதலனேக் காண முடியாததுதான். தாய்க்குத் தெரியாமல்—உற்ருர் பெற்ருர் அறியாமல்—அவள் ஆடவன் ஒருவனுடன் களவு மண வாழ்வு நடத்துகின்ருள். இந்த உண்மை அன்னேக்குத் தெரியாது. ஆதலால் அவள் என்னவோ ஏதோ என்று எண்ணி வருந்துகின்ருள். மகளின் இந்த நோய்க்குக் காரணம் தெய்வமாகத்தான் இருக்கவேண்டும் என்று அவளுக்கு வேண்டியவர்கள் கூறுகின்றனர்; அவளும் இப்படியே நினேக்கின்ருள். ஆதலால் தன் மகள் துயர் நீங்க—நோய் ஒழிய—முருகனே வணங்கி வழிபாடாற்றுகின்ருள். இதற்கு வேலன் வெறியாட்டயர்தல் என்று பெயர். இத்தகைய செய்தியை அகப்பொருள் பாடல்கள் பலவற்றிலே காணலாம். இதற்கு ஒரு உதாரணம் காண்போம். அகநானூற்றின் 98-வது பாடலேப் பார்த்தால் தெய்வ வழிபாட்டின் கருத்தைக் காணலாம்.

பனிவரை நிவந்த பயம்கெழு கவாஅன்
துனியில் கொள்கையொடு அவர்நமக்கு உவந்த
இனிய உள்ளம் இன்ன வாக,
முனிதக நிறுத்த நல்கல் எவ்வம்
சூர்உறை வெற்பன் மார்புறத் தணிதல்
அறிந்தனள் அல்லள் அன்னே; வார்கோல்
செறிந்துஇலங்கு எல்வளே நெகிழ்ந்தமை நோக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலின், முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர், பிரப்பு உளர்பு இரீஇ
'முருகன் ஆரணங்கு' என்றலின், அதுசெத்து,
ஓவத்து அன்ன வினேபுனே நல்இல்
பாவை அன்ன பலர்ஆய் மாண்கவின்
பண்டையாற் சிறக்களன் மகட்குஎனப் பரைகு

''குளிர்ச்சி பொருந்திய உயர்ந்த, வளம் பொருந்திய மலேச் சாரலிலே அவர் நம்மைச் சந்தித்தார்; வெறுப்பில்லாத கொள்கையுடன் அவர் நம்மிடம் மகிழ்ச்சி காட்டி இன்பம் தந்தார்; இத்தகைய அவர் உள்ளம் இன்று துன்பத்தைத் தந்துவிட்டது. அதனுல்

வெறுக்கும்படியான இன்னலைக் கொடுத்துவிட்டது. இந்த இன்னல் தணிய வேண்டுமானால், தெய்வம் வாழும் அந்த மலைத் தலைவனது மார்பைத் தழுவிக்கொள்ளவேண்டும்; இன்றேல் இத் துன்பம் நீங்காது. இதை அன்னை அறியமாட்டாள். என் கையிலே நெருங்கியிருக்கும் நீண்ட கோல் வடிவான வளையல்கள் தாமே கழன்று வீழ்வதைக் கண்டு என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தாள். அவள் பொய் கூறுவதில் வல்ல அறிவுள்ள பெண்டிரைப் பார்த்து இதற்குக் காரணம் கேட்டாள்; அவர்கள் புலி நெல்லைக் குலுக்கி வைத்து எண்ணினர்; 'இது முருகனால் ஏற்பட்ட துன்பம்' என்று கூறினர். அன்னை, அவர்கள் கூறியதை உண்மையென்று நினைத்தாள். உடனே, "சித்திரம் போன்ற நல்ல வேலைப்பாடமைந்த நல்ல வீட்டிலே உள்ள பாவை போன்றவள் என் மகள், பலராலும் பாராட்டப்படும் சிறந்த அழகுள்ளவள் என் மகள்; அவளுடைய அழகு முன்போலவே சிறப்படைக" என்று தெய்வத்தை வணங்கினாள்.

தலைவி, தன் தோழியிடம் உரைப்பதாக அமைந்திருக்கின்றது இச்செய்யுள். இச்செய்யுளிலே முருகனுக்குப் பூசையிட்ட முறை கூறப்படுகின்றது. தன் மகளின் நோய் நீங்கவேண்டியே, அன்னை, முருகனுக்கு வழிபாடு செய்கின்றாள். இத்தகைய கருத்துள்ள பாடல்கள் அகப்பொருள் நூல்களிலே பல உண்டு. இப்பாடல்கள் எல்லாம், பலன் வேண்டியே தெய்வத்தைப் பணிந்தனர் என்ற உண்மையை உணர்த்துகின்றன.

பரிபாடலில் உள்ள எட்டாம் பாட்டு முருகனைக் குறித்துப் பாடியது. திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகனை மகளிர் வணங்குகின்றனர்; தங்களுக்கு வரம் வேண்டுகின்றனர். அவர்கள் வேண்டும் வரம் இன்னின்னவை என்பதை அப்பாடலில் காணலாம்.

"மகளிர் முருகனை வழிபடுவதற்குவேண்டிய பொருள்களை எடுத்துக்கொண்டு பரங்குன்றத்தில் ஏறினர். எம்மைப் பிரிந்த கணவர் கனவிலே வந்து எம்மைத் தொடுகின்றார்; அவர் எம்மைத் தொட்ட கை நனவிற்போலவே எம்மைவிட்டு நீங்காமல் இருக்க, குளிர்ந்த வையையிலே வரும் நீரை அணிக; என்று சிலர் வரம் கேட்கின்றனர். எம் வயிற்றிலே கருவுண்டாகவேண்டும் என்று பொருள்களைவைத்துப் படைக்கின்றனர் சிலர்; பொருள் தேடச் சென்றிருக்கும் எம் காதலர்க்கு நல்ல செல்வம் கைகூட வேண்டும் என்று சிலர் வரம் கேட்கின்றனர். வியத்தற்குரிய போரிலே எம் காதலர் பகைவரைக் கொன்று வெற்றிபெறுக என்று சிலர் வேண்டுகின்றனர்; என்று கூறப்படுகின்றன.

அருவரைச் சேராத் தொடுநர்
கனவில் தொட்டது கைபிழை யாது
நனவில் சேஎப்ப, நின் நளிபுனல்வையை
வருபுனல் அணிகென வரங்கொள் வோரும்;

கருவயிறு உறுகளனக் கடம்படு வோரும்,
செய்பொருள் வாய்க்களனச் செவிசார்த்துவோரும்;
ஐஅமர் அடுகளன அருச்சிப்போரும்

இவைகளே, மேலே குறித்த பொருள் அமைந்த அடிகள்; இப்பரிபாடல் பாட்டும், இவ்வுலக இன்பத்தை வேண்டியே மக்கள், கடவுளரை வழிபட்டனர்; வணங்கினர்; என்ற உண்மையை வெளியிடுவதைக் காணலாம்.

குரவைக் கூத்து என்பது, பெண்கள் சேர்ந்து தெய்வத்தை வேண்டிக்கொண்டு, கைகோத்து ஆடும் கூத்தாகும். இக்கூத்தும் தங்கள் வாழ்வைக்கருதியே மகளிரால் ஆடப்பட்டது. இவ்வுலகத்தில், துன்பமின்றி இன்புற்று வாழ்வதற்காகவே குரவைக் கூத்தாடினர். இந்த உண்மையைத் தெளிவாகச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, என்று இரண்டு குரவைக் கூத்துகள் காணப்படுகின்றன.

ஆய்ச்சியர் குரவை மதுரைக் காண்டத்தில் உள்ளது; குன்றக் குரவை வஞ்சிக்காண்டத்தின் தொடக்கத்தில் உள்ளது.

ஆய்ச்சியர் குரவை, ஆயர்பாடியிலே, இடையர் மகளிரால் ஆடப்பட்டது; பின்னால்வரும் தீமையை முன்னறிவிக்கும் துன்னிமித்தங்கள் தோன்றின; அவைகளைக்கண்டு, அஞ்சி, தீமை வராமல் தடுத்துக்கொள்ளும்பொருட்டுக் கண்ணனை வேண்டிக் குரவைக் கூத்தாடினர்.

"குடத்திலே பிறையிட்டிருக்கும் பால் உறையவில்லை; குவிந்த இமிலையுடைய காளையின் கண்ணிலிருந்து நீர் சிந்துகின்றது; உரியிலே இருந்து இறக்கிய நல்ல வெண்ணெயை உருக்கினால் உருகவில்லை; ஆட்டுக்குட்டிகள் துள்ளிவிளையாடவில்லை; பசுக்கள் நடுங்கி நின்று வருந்துகின்றன; பசுவின் கழுத்தில் கட்டிய மணி தானே அறுந்து வீழ்கின்றது; இவைகள் எல்லாம், பின்வரும் தீமையைக் காட்டும் அடையாளங்கள். ஆதலால், நாமும், கறவை கன்றுகளும் துயர் நீங்கி வாழக் கண்ணனை வேண்டிக் குரவைக் கூத்து ஆடுவோம் என்று மாதரி கூறினாள்." என்பது ஆய்ச்சியர் குரவையிற் காணப்படும் செய்தி.

குன்றத்தில் வாழ்ந்த குறமகளிர் கண்ணகியை வாழ்த்திக் குரவைக் கூத்தாடினர். இதைக் கூறுவதே குன்றக் குரவை. மதுரையை எரித்த பதினான்காம் நாளிலே, கண்ணகி ஒரு குன்றிலிருந்த வேங்கைமரத்தின்கீழ் வந்து நின்றாள். அவள், தேவர்களால் கொண்டுவரப்பட்ட வானவூர்தியிலே, கோவலனுடன் கூடி வானம் சென்றாள். இதைக்கண்டிருந்த குறவர்கள் திகைத்தனர். அக்கண்ணகியை வாழ்த்தி வணங்கினர். குறமகளிர், தங்கள் பெருமலையிலே எல்லா வளங்களும் பெருகவேண்டும் என்று கண்ணகியை வேண்டிக் கூத்தாடினர்.

கோடுவாய் வைம்மின்; கொடுமணி இயக்குமின்;
குறிஞ்சிபாடுமின்; நறும்புகை எடுமின்;
பூப்பலி செய்ம்மின்; காப்புக்கடை நிறுமின்;
பரவலும் பரவுமின்; விரவுமலர் தூவுமின்;
ஒருமுலை இழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளம் சுரக்க எனவே.

"ஒரு முலையை இழந்துவந்த தெய்வத்திற்கு, பெரிய மலையிலே வளம் குறையாமல் பெருகவேண்டுமென வாழ்த்திப் பணிமின்; மான் கொம்புகளை வையுங்கள்; கொடிய ஓசையுள்ள மணியை அடியுங்கள்; குறிஞ்சிப் பண்ணைப் பாடுங்கள்; மணம் பொருந்திய புகையால் பூசியுங்கள்; பூவால் பலியிடுங்கள்; மதிலும் வாசலும் அமைத்துக் கோயில் எடுங்கள்; வணங்குவதும் செய்யுங்கள். பல மலர்களையும் கலந்து தூவிப் போற்றுங்கள்." இதனால் குன்றக் குரவையின் கருத்தைக் காணலாம்.

மேலே கூறியவைகளைக்கொண்டு, பழந்தமிழர்கள் கடவுளரை வழிபட்டதன் கருத்தை அறியலாம். இவ்வுலகில் இன்புற்று வாழ்வதற்காகவே கடவுளரை வேண்டினர்; அவர்களுக்கு விழாச்செய்து கொண்டாடினர்; அவர்களுக்கு உருவச்சிலை செய்து வைத்துப் போற்றினர்; கோயில்கள் எடுத்துக் கொண்டாடினர்.

இறந்தபின் இன்புறும் எண்ணத்துடன் தமிழர்கள் கடவுளரை வழிபட்டனர் என்பதற்கான ஆதரவுகளை மிகுதியாகக் காண முடியவில்லை. மதக் கொள்கைகளும் — தத்துவங்களும் வளர்ந்த காலத்தில்தான் மறுமையின்பத்திற்காகக் கடவுளை வழிபாடு செய்யும் வழக்கம் உண்டாயிற்று. தேவாரம், பிரபந்தம் முதலியவைகளிலும், அவற்றின்பின் தோன்றிய வணக்கப் பாடல்களிலும், மறுமை இன்பத்தை வேண்டும் கருத்துக்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆயினும் அப்பாடல்களிலும் உலகம் நன்ருக வாழவேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொள்ளும் கருத்துள்ள பாடல்களும் சிற்சில உண்டு. இது பழந்தமிழ் மக்களின் பண்பாட்டை ஒட்டி எழுந்த பாடல்கள்.

இன்று நடைமுறையிலும் பழந்தமிழர் பண்பாடுதான் மக்களிடம் மிகுதியாகக் காணப்படுகின்றது. "எனது பாவம் தொலைய வேண்டும்; இவ்வுலக வாழ்வை நான் விரும்பவில்லை. பிறவா நெறியை எனக்கு ஈந்தருள வேண்டும்" என்று கடவுளை வேண்டுவோர் சிறுபான்மையினர்தாம். பெரும்பாலான மக்கள் "எங்கள் துன்பத்தைப் போக்கவேண்டும்; இவ்வுலகில் இனிய வாழ்வை அருள வேண்டும்" என்றுதான் தெய்வங்களை வேண்டிக்கொள்ளுகின்றனர். தங்கள் பிணி தீரவேண்டும் என்று கேட்கின்றனர். இதன் பொருட்டுத் தல யாத்திரை—தீர்த்த யாத்திரை—செய்கின்றனர். இவ்வாறு தந்நலம் கருதித் தெய்வங்களை வழிபடும் வழக்கந்தான் இன்றும் மலிந்திருக்கின்றது.

சென்ற இதழின் தொடர்ச்சி

# இசைத் தமிழ்ப் பண்கள் விளக்கம்.

சங்கீதம், ப. சுந்தரேசன், குடந்தை.

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே)

விளக்கம் ௰௬.

சென்ற பொழில் மலரில், தாரம் தாரமாய முதல் ஐந்திசைப் பண்களில் முதற் பண்ணும் தாரப் பண்ணையும், தாரம் தாரமாய முதல் ஏழிசைப் பெரும்பாலைகளில் முதற்பெரும் பண்ணும் மேற்செம்பாலையையும் அதன் அலகுக் கணித முறைகளோடும் தற்கால இசை நிலைகளோடும் நன்கு விளக்கிவிட்டேம்.

நம் பண்டைய இசைத் தமிழில் ஏழிசைகளை, கருவிகள் மூலம் செவ்விதின் உணரப்பெற்ற காலத்தேயே ஒவ்வொரு இசையையும் தனித்தனியாகவும் கண்டு, ஈரிசைகளாகவும் மூவிசைகளாகவும் நான்கிசைகளாகவும் ஐந்திசைகளாகவும் ஆறிசைகளாகவும் ஒவ்வொன்றிற்குமுடைய தொடர்பு வகைகளையும் ஓர்ந்தோர்ந்து உணரப்பெற்றன.

அவ்வாறுணரப்பெற்றதின் பயனாக முதலிசைக்கு அதாவது தொடக்க இசைக்கு இரண்டாமிசையும் ஏழாமிசையும் இணை எனப்படுவதாயிற்று.

---

201-ம் பக்கத் தொடர்ச்சி]

இருக்கு வேதத்திலே காணப்படும் இந்திர வணக்கம், வருண வணக்கம் முதலியவைகளிலே, இவ்வுலகம் இன்புறும்படிதான் வேண்டிக்கொள்ளுகின்றனர். நல்ல மழை பெய்யவேண்டும்; மாநிலம் செழிக்கவேண்டும்! ஆடு மாடுகள் பெருகவேண்டும்; அவற்றால் மக்கள் நலம்பெற்று வாழவேண்டும்; என்ற கருத்துக்களே வேதப் பாடல்களிலும் காணப்படுகின்றன. இதனால், மக்கள், கடவுளர்களை வழிபட்டதன் நோக்கம் இவ்வுலகில் இன்புற்று வாழ்வதற்காகத்தான் என்று அறியலாம். இந்தப் பண்பாட்டை வலியுறுத்தும் பாடல்களை இராமலிங்க சுவாமிகள் பாடல்களிலே ஏராளமாகக் காணலாம். பாரதியாரின் தோத்திரப் பாடல்கள் எல்லாம், பழந்தமிழர் பண்பாட்டைப் பின்பற்றியவைகளேயாகும்.

''வாழ்க்கை வாழ்வதற்கே" என்பதுதான் தமிழர்களின் கொள்கை. இதன் பொருட்டே அவர்கள் பல செயல்களையும் செய்து வந்தனர். கட்டுப்பாட்டுடன் வாழ—நல்லொழுக்கமுடன் வாழ—கடவுளரைப் பணிந்து வந்தனர். தங்கள் வாழ்வு செழிப்பதற்காகவே கடவுளரை வழிபட்டனர்; தங்களுக்கு வேண்டியவைகளையெல்லாம் கடவுளர்களால் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையுடனேயே கடவுளர்களுக்கு விழாச்செய்து கொண்டாடினர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழர்களிடம் இக்கருத்துக் கொடிகொண்டிருந்தது வியத்தற்குரியது; இதனால், அவர்கள் நாகரிகம் அக்காலத்திலேயே மிக உயர்ந்த நிலையில் அமைந்திருக்க வேண்டும் என்று துணியக் கூடியதாகும்.

அவை :— "இணையெனப் படுவ கீழு மேலு
மணையத் தோன்று மளவின வென்ப"

எனும் நூற்பாவால் தெளிவுறுத்தப்பட்டன.

தொடக்க இசைக்கு மூன்றுமிசையும் ஆறுமிசையும் **பகை** எனக்கூறப்படுவதாயிற்று.

அவை :— "நின்ற நரம்பிற் காறு மூன்றுஞ்
சென்று பெற நிற்பது கூடமாகும்"

என்ற நூற்பாவால் தெளிவுறுத்தப்பட்டு, "கூடமெனினும் பகையெனினுமொக்கும்" எனவும் கூறப்பட்டன.

நட்பு நாலாநரம்பெனப்பட்டது. இதனை, நட்பின் இசை யலகுக் கணித முறையையும் பயிற்சி முறையையும் ஒருங்கே உளத்திற்கொள்ள,

"ஒன்பா னலகில் நட்பாய் நின்று
நான்கா மிசைதான் நனிசிறக் கும்மே"

எனக்கூற நேரிடுகிறது.

பின்னர் கிளை — ஐந்து நரம்பெனப்பட்டது. அதாவது ஐந்தாம் நரம்பு கிளையென்பதாகும். இதனை,

"கிளையெனப் படுவ கிளக்குங் காலைக்
குரலே யிளியே துத்தம் விளரி
கைக்கிளை யெனவைந் தாகு மென்ப"

எனும் நூற்பாவால் பண்டைய உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டினர். இந்நூற்பா குரல் முதலாகக் கூறப்படுவதாகும். தாரம் முதலாகக் கூற,

"தாரமே யுழையே குரலே இளியே
துத்தம் விளரி கைக்கிளை எனவே
யாகு மென்ப ரிசைவல் லுநரே"

எனக்கூற நேரிடும். இவற்றினிடையேயமைந்த நுட்பப் பகுதி களியாவும் ஏற்றபெற்றி மேல்வரும் விளக்கங்களில் உரிய இடத்தே விளக்கப்பெறும்.

**விளக்கம் ௫ள.**

மிகப் பழைய இசைத் தமிழ்ச் சொற்களில் ஒன்றாகிய இணை என்ற சொல்லிற்குத் தற்கால இசை முறையில் விளக்கங் கூற வேண்டுமானால் இவ்வாறு கூற நேரிடும்—அதாவது, தொடக்க இசையாகிய ஷட்ஜத்திற்கு (இளிக்கு) ருஷபமும் (விளரியும்) நிஷாதமும் (உழையும்) இணையிசைகளாம். இவை,

சா சரிசா சநிசா சரிசநிசா சரிசநிசரிசா

சா சரிரிசா சநிநிசா சரிரிசசநிநிசா சரிரிசசநிநிசரிரிசா

சா ரிசசநி சரிசநிசா சா ரிரி சசநிநி சரிசநிசா

சரிச நிரிசசநி சா சரிசசநி நிரிசசநி சா சநிசரி சா

இவ்வாறு எந்தப் பெரும்பண்ணிலும் (கர்த்தா இராகங்களிலும்) வாய்ப்பாட்டாகவோ, கருவியிலோ, பாடியோ, இசைத்தோ கண்டால், இணை எனுஞ்சொல்லின் இசைத் தமிழ்ப் பொருள் நன்கு பழக்க முறையிலும் விளங்கும். மேற்கூறியாங்கு தற் காலம் எந்த இசையை முதலிசையாகக் கொண்டாலும், அம் முதலிசைக்கு மேலடுத்துள்ள இசை இரண்டாமிசையாகும். இது யாவருக்கும் எளிதில் விளங்கும். கீழுள்ள இசை, அதாவது (நி) உழை, இளிக்கு உழை ஏழாமிசையாவது எவ்வாறு எனில் கீழ்நிலையில் (மந்திரஸ்தாயியில்) ஏழாமிசையாகும் என்பதை உணரவேண்டும். இக்கருத்தையே பண்டைய நூற்பா, "கீழும் மேலும்" என நன்கறிந்து உணர்ந்து ஓதிவைத்தது.

பகை என்ற இசைகள் அந்தந்த இசைக்கு மூன்றுமிடத்தி லும் ஆறும் இடத்திலும் இருந்து அந்நிரலில் எந்த இசைகளுட னும் தான் ஒத்து இசைக்காது (உழைக்காது), தனியாகவே நின்று தனக்கு வேறு இணையும் பகையும் நட்பும் கிளையுங் கொண்டு திகழ்வனவாகும்.

இக்காலத்தில் இதனமைப்புகளைக் கூறவேண்டினுல் ஒரு ஷட்ஜத்திற்குக் காந்தாரமும் தைவதமும்போல்வன எனக்கூற வேண்டும். கருவிகளில் ஷட்ஜத்தோடு காந்தாரத்தையும் அல்லது நிஷாதத்தையும் சேர்த்து அழுத்திநோக்க இசையொப்புமை யில்லாது வெறுக்கத்தக்க ஒலிகளாகிவிடுவதை இன்றுங் காண லாம். பகையிசை, தான் தனியாக நின்று முதலிசையாகு மிடத்து தனக்கு, இரண்டும் ஏழும் இணையாகவும் ஆறும் மூன் றும் பகையாகவும் நான்கு நட்பாகவும் ஐந்து கிளையாகவும் கொண்டாலும் தான் சென்று நிற்குமிடம், வேறொரு இசை யாகிய ஏதேனுமொன்று தொடக்க இசையாக நிற்க அதனிடத் திற்குத் தான் அமைந்து நிற்குமிடம் மூன்றும் இடமாகவேனும் ஆறுமிடமாகவேனும் இருந்தாலன்றி, தான் பகையாகாது ஆன மையினுலே, நம் இசைத் தமிழ்ப் பண்டைய நூற்பாவும் சென்று பெற நிற்பது கூடமாகும் என விதந்தோதிற்று.

நட்பு எனும் இசை ஒருநிரலில் ஓரிசைதான் வரும். அதாவது, தொடக்க இசைக்கு நான்காமிசையாகும். இக்கால முறையில் இதனைக்கூற ஷட்ஜத்திற்குச்சுத்த மத்யமமாகிய நான்கா மிசையென்பதாகும். ஷட்ஜமாகிய தொடக்க இசைக்கு ஒன்ப தாமலகில் நிற்குமோரிசையே சுத்த மத்யமமாகும். அதுவன்றி எட்டாமலகிலேனும் பத்தாமலகிலேனும் நிற்கும் எந்த இசை யும் நட்பு ஆகாது. அதனுற்றான், "ஒன்பானலகில் நட்பாய் நின்று" எனக்கூற நேரிட்டது.

இக்காலத்தும் ஒரு கருவியில் தொடக்க இசையோடு (ஷட்ஜத்தோடு) சுத்தமத்யமத்தைச் சேர்த்து இசைத்துக் கண்டால், ஒலியொப்புமையின் இனிமை, பண்டைய நட்பு என்ற இசைத்தமிழ்ச் சொல்லின் பொருளை நன்கு விளங்கவைப்பதனைக் காணலாம். இக்காலத்தில் இரண்டு மத்யம இசைகள்-அதாவது சுத்தமத்யமம் பிரதிமத்யமம் என இருப்பதாலும் நின்ற இசைக்கு, சுத்தமத்யமம் அல்லது பிரதிமத்யமம் ஏதேனுமொன்றை நிறுவி னும் நான்காமிசையாகவே நின்றபோழ்தினும் சுத்தமத்யமம் ஒன்றே நட்பிசையாவதற்குரியதாம். பிரதிமத்யமத்தின் அலகு கள் கூடி நின்று முதலிசையோடு சேர்ந்திசைக்காத நீர்மையைப் பெற்றமையினலே அது நட்பிசையன்று. நான்காமிடத்தில் நின்றும் நட்பாக இருக்க இயலாதுபோனமைபற்றியே பண்டைய தாரக்கிரமம் வழக்கொழிந்ததென்பர்.

பண்டைய தாரமுறையில் முதன்முதற்றேன்றும் முதலே ழிசைப் பெரும்பாலையாம் மேற்செம்பாலையில் நான்காமிசையாக நிற்பது தற்காலத்திய பிரதிமத்யமம் எனக்கூறவேண்டும். இந்த மத்யமத்தை பிற்காலத்தில் வேங்கடமகியென்பார் வராளி மத்யமம் எனக்கூறினர்.

கிளையிசை என்பது நின்ற (தொடக்க) இசைக்கு ஐந்தா மிசையாகும்—அதாவது தற்காலத்தில் ஷட்ஜத்திற்குப் பஞ்சமம் எனக்கூறவேண்டும். இது தொடக்க இசைக்குப் பதிமூன்று மலகில் நிற்கவேண்டும். இம்முறையில், பண்டைய இசைகளில்,

| | | |
|---|---|---|
| தாரத்திற்குக் | — கிளை — | உழை |
| உழைக்குக் | ,, | குரல் |
| குரலுக்குக் | ,, | இளி |
| இளிக்குக் | ,, | துத்தம் |
| துத்தத்திற்குக் | ,, | விளரி |
| விளரிக்குக் | ,, | கைக்கிளை, என்பதாகும். |

இவற்றையே, தாரம் முதலாகக் கூறுமிடத்து "தாரமே உழையே குரலே" எனவும் குரல் முதலாகக் கூறுமிடத்து "குரலே யிளியே துத்தம்" எனவும் கூற நேரிட்டன.

விளக்கம் ௰அ.

இதுகாறும் விளக்கிவந்த பண்டைய இசையமைதி நட்பக் கருத்தின் வழி ஆராய்ந்தறிய, முதலிசையாகிய தாரத்திற்குக் கிளையிசை உழையாதலான் உழைமுதலாகவும் பண்களையாராய்ந்து நிறுவலாம்.

முதலேந்திசைப் பண்ணில் அமைந்துள்ள உழைமுதலாக ஐந்திசைகளை எழுத, உழை, இளி, தாரம், குரல், துத்தம், என நிற்கும். இந்நிரலில் தொடக்க இசையை உழையாகக்கொள்ள

மற்றைய இசைகளின் அலகு நிலைகளை கணித்து எழுதியறிய வேண்டும். முதலமைப்பில் துத்தமிருந்து ஐந்தாமலகில் (அதாவது) தொடக்க இசையாகிய தாரத்திற்கு பதின்மூன்று மலகில் உழை நின்றது. அதனை நிறுத்தி ஏனைய இசைகளையும் அலகுகளையும் எழுதுவாம்.

உழை — இளி — தாரம் — குரல் — துத்தம்
0 ௪ — ௫ — ௪ — ௪

இப்பண்ணின் பெயர் **உழைப்பண்** எனப்பட்டு பிற்காலத்தில் சாதாளி எனப்பட்டது.

இப்பண்ணின் அடைவு முறைகளை அடைப்பினுள் எழுதித் தெளிவு செய்வாம்.

| பழங்காலப் பெயர் | | பண் ந | தற்காலப் பெயர் |
|---|---|---|---|
| உழைப்பண் | | இடைக்காலப் பெயர் — சாதாளி | சுத்தசாவேரி |
| முதல் ஐந்திசைகளின் கிளைநிரலாகிய நான்காம் நிரல் | அலகுகள் | தற்காலச் சுருதிப் பெயர்கள் | தற்கால இசைப் பெயர்கள் |
| உழை | 0 | ஆதார சுருதி | ஷட்ஜம் |
| இளி | ௪ | நான்கு சுருதிகள் இதனைச் சேர்த்து | சதுச்ருதி ருஷபம் |
| தாரம் | ௫ | சுருதிகள் ஒன்பது இதனைச்சேர்த்து | சுத்தமத்யமம் |
| குரல் | ௪ | பதிமூன்று சுருதிகள் இதனைச்சேர்த்து | பஞ்சமம் |
| துத்தம் | ௪ | பதினேழு சுருதிகள் இதனையும் சேர்க்க | சதுச்ருதி தைவதம் |
| மேநிலை உழை | ௫ | இருபத்திரண்டு சுருதிகள் | மேனிலைத் தாரஷட்ஜம் |

தற்கால இசைப் பெயர்களின் முறையில் அட்டவணையிற் காட்டியாங்கு உள்ள இசைகளைக்கொண்ட தற்கால இராகம் சுத்த சாவேரி எனப்படுவதை இசையுலகம் நன்கறியும். ஆகவே பழங்காலத் தமிழ்ப் பண்களில் ஒன்றாகிய சாதாளி ,தற்காலம் சுத்தசாவேரி எனும் பெயருடன் நம் நாட்டில் வழக்கிலிருப்பது நன்கறிந்துணரப்படுகிறது. இப்பண்ணிற்கு இலக்கியமாக தேவாரப் பாடல்களோ திருவாய்மொழிப் பாடல்களோ தற்காலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் பண்டைய இசைத் தமிழ் வரிப்பாடல்களுட் சிறந்த "திங்கண்மாலை வெண்குடையான்" எனும் பாடல் இப்பண்ணிற்குச் சிறப்பாகவமைந்திருப்பதால் யான் எழுதிய "முதல் ஐந்திசைப் பண்கள்" என்ற நூலில் அப்பாடலை இப்பண்ணில் இசைப்படுத்தியுள்ளேன்.

இனி இப்பண்ணின் இசைகளையே ஏழிசைகளாகக் கொண்டு வரும் பெரும்பண்ணை விளக்குவாம்.

உழைப் பண்ணின் ஐந்திசைகளோடு புதிய இரண்டிசைகளாகிய **கைக்கிளை விளரி**யைச் சேர்த்தெழுதினால்—

உழை—இளி – **விளரி**—தாரம்—குரல் —துத்தம் — **கைக்கிளை** எனவமைந்து நிற்கும்.

இதனலகு நிலைகள்,

உழை—இளி—விளரி—தாரம்—குரல்—துத்தம்—கைக்கிளை
0 — ச — ச — க — ச — ச — ச —

என நிற்குமாதலான் இப்பெரும் பண்ணின் அமைதியையும் அடைப்பினுள் எழுதியறியலாம். (அடுத்த பக்கம் பார்க்க.)

தற்கால இசைப்பெயர்களின் அட்டவணையிற்காட்டிய இசைநிலைகளைக் (சுரத்தானத்தை)க் கொண்ட தற்காலத்திய பெரும்பண் (கர்த்தாராகம்) தீரசங்கராபரணம் எனப்படுகிறது. இப்பண்ணையேதான் நாம் சுருக்கமாக **சங்கராபரணம்** எனக் கூறிவிடுகின்றோம்.

இப்பெரும் பண்ணின் தோற்றுவாய் முறை, சிலப்பதிகார காலத்திற்கு முன் உழைதாரமாய அரும்பாலையெனக் கூறப்பட்டிருக்கவேண்டும். இதுபோன்றே ஐந்திசைப் பண்களில் ஒன்றான உழைப்பண்ணும் உழை தாரமாய உழைப்பண் எனக் கூறப்பட்டிருத்தல்வேண்டும். பின்னர் ஒருமுறையைப் பின்பற்றி, உழை குரலாய அரும்பாலையெனத் தார முறையிலும், விளரி குரலாய அரும்பாலையென குரன் முறையிலும் கைக்கிளை குரலாய அரும்பாலையென இளி முறையிலும் மூவகையாகக் கூறப்பட்டது.

| பழங்காலப் பெயர் | | பண் ச | தற்காலப் பெயர் |
|---|---|---|---|
| உழைப்பெரும்பண் அரும்பாலை | | இடைக்காலப் பெயர்கள் பற்பலவாகவே உள்ளன | தீரசங்கராபரணம் |
| முதல் ஏழிசைகளின் கிளை நிரலாகிய ஐந்தாம் நிரல் | அலகுகள் | தற்காலச் சுருதிப் பெயர்கள் | தற்கால இசைப் பெயர்கள் |
| உழை | 0 | ஆதார சுருதி | ஷட்ஜம் |
| இளி | ச | நான்குசுருதிகள் இதனைச் சேர்த்து | சதுச்ருதிருஷபம் |
| விளரி | ச | எட்டு சுருதிகள் இதனைச் சேர்த்து | அந்தரகாந்தாரம் |
| தாரம் | க | ஒன்பது சுருதிகள் இதனைச்சேர்த்து | சுத்தமத்யமம் |
| குரல் | ச | பதிமூன்று சுருதிகள் இதனைச்சேர்த்து | பஞ்சமம் |
| துத்தம் | ச | பதினேழு சுருதிகள் இதனைச்சேர்த்து | சதுச்ருதி தைவதம் |
| கைக்கிளை | ச | இருபத்தியொரு சுருதிகள் இதனையும் சேர்க்க | காகலிநிஷாதம் |
| மேனிலை உழை | க | இருபத்திரண்டு சுருதிகள் | மேனிலைத் தாரஷட்ஜம் |

அலகு நிலைகள் அக்காலத்தும் இக்காலத்தும் ஒன்றேதானென நன்கறிதல் வேண்டும். வடநூலார் கூறிய பிரமாண சுருதிகளாம் இருவகையான இரண்டலகுகளை, யாழ்நூல்யாத்த விபுலாநந்த அடிகள் கூறியாங்கு கிளையிற் பிறப்பு முறையிற் றோன்றிய இரண்டலகினை விதியிசை எனவும் நட்பு முறையிற் றோன்றிய இரண்டலகினை நெட்டிசை, எனக்கூறப்பட்ட வகைகளெல்லாம் பண்டைய யாழ்க் கருவிகளின் அமைப்பு முறைகளாகும். அவை யாவும் உரிய பகுதிகளில் விளக்கப்பெறும். (தொடரும்)

# தொல்காப்பியம்

சேனவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு]

"பேடியர் .................பெயர் நிலைக்கிளவியென்றார்" என்பது, "பேடியென்னும் பெயர்நிலைக்கிளவியும்" என்றாலே அதன் சம்பந்தமான பன்மை மொழிகளும் (பேடியர் முதலிய பெயர் களும்) கொள்ளப்படுமன்றோ, எதற்காக "பெண்மை சுட்டிய... ...பெயர் நிலைக்கிளவியும்" என இயல்புகூறி விளக்கினர் எனில் "பேடியென்னும் பெயர்நிலைக்கிளவியும்" என்று கூறினல் பேடி யென்பதைமட்டும் கொள்ளல் நேருமன்றி அதன் பன்மை மொழிகளும் கொள்ளல் வேண்டுமென்பது நன்கு விளங்காதாக லான், நன்கு விளங்குதற்கு "பெண்மை சுட்டிய.........பெயர் நிலைக்கிளவியும்" என்றனர் என்கின்றது.

"பெண்மை சுட்டிய என்பது இடைநிலை" என்பது, பெண்மை சுட்டிய, ஆண்மை திரிந்த என்ற இரண்டனுள், ஆண்மை திரிந்த என்பது 'பெண்மை சுட்டிய' என்பதனாற் குறிப்பிடப்படும் பெயரையே விசேடிக்கவந்ததன்றி வேறுபெயரைக் குறிப்பிட வந்ததன்று. அதாவது சாத்தன் வயிறாரவுண்டான் என்றால் 'வயிறார' என்பது உண்டலை விசேடித்து சாத்தன் உண் டல் இன்ன நிலைமைத்து எனக் கொள்ளவந்ததுபோல இங்குப் பெண்மை சுட்டிய பெயர்நிலைக்கிளவி யென்பது ஆண்மை திரிந்த பொருளையுணர்த்தும் பெயர்நிலைக் கிளவியாகும் எனக்கொள்ள இடையில் வந்ததாகுமே யொழிய கற்ற கல்லாத மனிதர் என்புழிக் கற்ற மனிதர்வேறு கல்லாத மனிதர்வேறு எனக்கொள்ளவந்தது போல பெண்மை சுட்டிய பெயர்நிலைக்கிளவி வேறு, ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி வேறு எனக்கொள்ள வந்ததன்று எனக் குறிப் பிடுகின்றது.

இடைநிலை = இடைப்பிறவரல்.

'தத்தமெச்சமொடு சிவணுங்குறிப்பி, னெச்சொல்லாயினு மிடைநிலை வரையார்'' (தொல்-சொல்-எச்) என்பதனல் இடைப் பிறவரலை "இடைநிலை" என ஆண்டிருத்தல் காண்க. இடை நிற்றலில் இடைநிலை யெனப்பட்டதென்க.

அந்நூற்பாவில் "எச்சொல்லாயினும்" என்றதனல் இடை நிற்பன பிறசொற்களே யன்றி பெயர்வினை எச்சமுமிடைநிற்றல் பொருந்துமெனக் கொள்ளுமாறு சேனவரையர் "உழுதோடி வந்தான், கவளங்கொள்ளாக் களித்த யானை" என எச்சமும் இடைநிலையாதல் கொள்க என எழுதுதலையுங் காண்க.

"தன்மை திரிபெயர்........என்றார்"

என்பது, ஆண்மை திரிதல் பொருளுக்காகுமன்றிச் சொல்லிற் கில்லையாதலின் "ஆண்மைதிரிந்த பெயர் நிலைக்கிளவி" என்று பொருந்துமா? என்னும் வினவிற்கு விடையாகின்றது.

"குடிமையாண்மை" (தொல்-சொல்-கிளவி) என்னு நூற்பாவின்கண் பொருளின் றன்மை திரிதலைச் சொன்மேலேற்றி, "தன்மைதிரிபெயர்" என்றாற்போல இங்கும் ஆண்மைதிரிதலாகிய பொருளின்றன்மையைச் சொல்மேலேற்றி "ஆண்மைதிரிந்த பெயர்நிலைக் கிளவி" என்றனர்; இரண்டற்கும் உணர்த்தலுமுணர்த்தப் படுத்தலுமாகிய (தப்பாத) ஒற்றுமை யிருத்தலால் என்பது சேனாவரையர் கொள்கை.

"பெயர்நிலைக் கிளவி"

"பெண்மை சுட்டிய" என்பதனால் "பெயர்நிலைக் கிளவி" என்பது பெயர்ச்சொல் என்னுந்துணையாக நின்றது. 'பெயரை நிலையாகக்கொண்ட (பொருளை நிலையாகக்கொண்ட) கிளவி' எனப் பொருள் கொள்ளுமாறு நிற்கவில்லை.

"பெயர்நிலை"

பெயரென்பது 'பொருள்' ஆயினும், அதனை யுணர்த்துஞ் சொல்லும் பெயரெனப்படும் என்பதனை "சொல்லெனப்படு பெயரே வினையென்" (தொல்-சொல்-பெயரியல்) என்பது முதலியவற்றாலறியலாம். ஈண்டு பெயர் என்பது பொருளென்னும் பொருட்டாகநின்று 'நிலை' என்பதனோடெடுத்து இருபெயரொட்டாகுபெயராய்ப் (அன்மொழித்தொகை யாகுபெயராய்) பொருளாகிய நிலையையுடைய சொல் எனப் பெயர்ச்சொல் என்பது இன்னதென விளங்க நின்றது. எனவே சொல்லை யுணர்த்தும்போது 'பெயர்' என்பதும் பெயர்நிலை யென்பதும் ஒரு தன்மைப்பட்டனவாகும் என்பது பெறப்படுகின்றது. 'பெயர்' என்பது சொல்லிற்காங்கால் அதற்குமேல் 'கிளவி' என்பது அதனை விளக்கும் சொல்லாக வர இயற்பெயர்க் கிளவி, சுட்டுப்பெயர்க்கிளவி, என இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகத் தொடர்ந்து நிற்றல் போலவே, 'பெயர்நிலை' என்பதும் சொல்லிற்காங்கால் அதற்குமேலும் அதனை விளக்குவதாக 'கிளவி' என்னுஞ் சொல் வர இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகத் தொடர்ந்து பெயர்நிலைக் கிளவியென நின்றதென்க.

பெயர்நிலை யென்பதில் பெயர் என்பது பொருளை யுணர்த்துமென்பதையும் அத்தொடர் அன்மொழித் தொகை யாகுபெயராய்ப் பெயர்ச்சொல்லென்பதுபட நிற்கின்ற தென்பதையும் "வினையிற்றோன்றும் பாலறிகிளவியும்" (தொல்-சொல்-கிளவி) என்பதனுரையிலும் "பெயர்நிலைக் கிளவி காலந்தோன்றா" (தொல்-சொல்-கிளவி) என்பதனுரையிலும் முறையே "ஈண்டுப் பெயரென்றது பொருளை", எனவும் "பெயராகிய நிலையையுடையது பெயர்நிலை யென அன்மொழித் தொகை. பெயர் = பொருள். தொழினிலையுமது". எனவும் சேனாவரையரெழுதிய உரைகொண்டு தெளிவுறலாம்.

ஒருவகைச் சொற்கள் பெயரை (பொருளை) நிலைக்களமாகக் கொண்டு வழங்குதலால் பெயர் எனவும் பெயர்நிலை எனவும் அவற்றை ஆண்டிருத்தல்போல அப்பெயரை (அப்பொருளை) அச்சொற்களே யுணர்த்தும் என்பதும் தோன்ற "இனச்சுட்டில்லாப்

பண்புகொள் பெயர்க்கொடை” எனவும் பிறவாறும் வழங்கி யிருத்தலுங் காண்க.

இனிப் “பெயர் நிலை” என்பது பெயர்ச்சொல்லின் பரியாயமாக வருமென்பதை “ஒப்பிணுகிய பெயர்நிலை யுளப்பட” (தொல்–சொல்–பெயரியல் ௰௪) என வழங்குதலா லறியலாம். பெயர் நிலை= பெயராகி (பொருளாகி)ய நிலையையுடைய சொல். ‘பொருள்’ என்பது பண்பு, தொழில், பொதுத்தன்மை, (சாதி) சிறப்புத் தன்மை (விசேடம்) முதலியவற்றை யுடையதாகும். அதனை யுணர்த்துஞ்சொல்லே பெயர்ச்சொல்லாகும். பண்பு, தொழில் முதலியவற்றை யுணர்த்துஞ் சொற்களை வழுவமைதியாகப் பெயர்ச் சொல்லெனவும் வழங்குப. தொழிலைக் காலத்தொடு படுத்தி யுணர்த்துஞ் சொல்லை வினைச்சொல் என வழங்குப. பண்பு தொழி லிவற்றை யுணர்த்துஞ் சொலலை உரிச்சொல்லென வழங்குப.

“பாலுளடங்காத ................... அடக்கியவாறு”

என்பது எதனை அறிவிக்கின்றதெனில் இங்கு, ‘பேடி’ என்னும் பொருளை யுணர்த்தும் பெயர்கள் உயர்திணைப் பெண்பாலுணர்த்தும் பெயருள்ளும் அத்திணைப்பெண் பன்மையையுணர்த்தும் பெயருள்ளும் அடங்கும், தெய்வத்தை யுணர்த்தும் பெயர்கள், உயர்திணைப் பெயருள் அடங்கும் என அடக்கிக் கூறினமையால் அப்பெயர்களா லுணர்த்தப்படும் பேடி, தெய்வமென்னு மிரண்டனுள் ‘பேடி’என்பது (பேடி என்னும் பொருள்) உயர்திணை மகடூஉவாகவும் ‘தெய்வம்’ என்னும் பொருள் உயர்திணைப் பொருளாகவும் அடக்கப்பட்டன என்பது பெறப்படுகின்றது என்கின்றது.

‘பேடி’ யென்பது மகடூஉவிலும் ‘தெய்வம்’ என்பது உயர்திணைப் பொருளிலு மடங்கினுலன்றி அவற்றை யுணர்த்தும் பெயர்கள் மகடூஉப் பெயரிலும் உயர்திணைப் பெயரிலு மடங்காவாதலின் அவ்வா றடக்கப்பட்டன என்பது கருத்து.

அடக்கியவாறு = அடக்கியபடி. அடக்கிய தன்மை வெளிப்படு கின்றதென்பதாம்.

சுட்டிய.........கருத்தன்றென்க. என்பது, உரையாசிரியருரை யிற் காணப்படு முரை அவர் கருத்தாக எழுதப்பட்டதன்று. பிறர் கருத்தாகவுள்ளதிங் கெழுதப்பட்டதென்கின்றது. பிறர் கருத்தாக வுள்ளதனை எதற்காக எழுதினுர் எனில் மாணுக்கருக் குணர்வு பெருகுதற் கெழுதினுரென்க.

இவ்வுரைப் பகுதியும் இப்பொழுதச்சிடப்பட்ட வுரையாசிரிய ருரையிற் காணப்பட்டிலது.

‘சுட்டிய’ என்பது பெயரெச்சம் என்பது சேனுவரையர் கருத்து அது வினையெச்சமாகும் என்பது உரையாசிரியர் கருத்து.

பேடி யென்னும் பொருளில் பெண்மை மிக்கிருத்தலும் ஆண்மைத் தன்மை குறைந்திருத்தலும் இயல்பாக அமைந்ததல்லா மல் ஆக்கிக் கொள்ளப்பட்டன இல்லையாதலால் சுட்டிட வேண்டி ஆண்மைத்தன்மை குறைந்த, எனப் பொருள்கொள்ளல் பொருந் தாது. அவ்வாறு ‘பெண்மை சுட்டிய’ என்றவிடத்துப் பொருள்

கொள்ளின் "தெய்வஞ் சுட்டிய" என்றவிடத்தும் சுட்டவேண்டி எனப் பொருள்கொள்ளல் வேண்டும். அங்கவ்வாறு பொருள்கொள்ள இயலா தாகலானும் சொல்லதிகாரத்தில் சொல்லை யன்றிப் பொருளைக் கூறினரெனில் மற்றொன்று விரித்தலாகுமாதலானும் அங்ஙனங் கூறல் பொருந்துமெனினும், 'பேடிமகடூஉ, வாகுந்தெய்வம் உயர்திணை மருங்கி, னறையப்படுமே' என்பது போலச்சுருங்கிய வாய்பாட்டாற் கூறுவரன்றி ஆகுபெயராற் 'பொருள்' எனக் கொள்ளும்படி விரிவுபடக் கூறாராதலானும், பேடியென்பது இன்னதென அதனை விளக்குமுகத்தான் அங்ஙனங் கூறினரெனின், அங்ஙனமாஞல் தெய்வத்தைக் கூறும்பொழுதும் "தெய்வமென்னும் பெயர் நிலைக்கிளவியும்" என்று கூறுதல்வேண்டும்; அங்ஙனங் கூறாமையானும் கூறுவது சொல்லைப்பற்றியேதான் என்பது வெளிப்பட, "தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக்கிளவி" எனக்கூறியிருத்தலானும் பெண்மைசுட்டிய உயர்திணைமருங்கி னாண்மை திரிந்த பெயர் நிலைக்கிளவியும்" என்பதும் சொல்லைப்பற்றிய கூற்றேயன்றிப் பொருளைப்பற்றியதன்று, ஆதலால் உரையாசிரியர் பிறர் கருத்தாக எழுதியவுரை பொருத்தமுடையதன் றென்பதாம்.

'சுட்டுதல்' என்பது இஃதென விளங்கவுணர்தல். (இங்கும் கருவியைக் கருத்தாவாகக் கூறுகின்றனரென்க.) இங்குப் பேடிப் பெயர்கள், தம்பொருளில் ஆண்மைத்தன்மை யிருப்பினும் அது சிறுகி யிருத்தலின் பெண்ணுகவே, விளக்கமுற வுணரும்படி செய்தலும் தெய்வத்தைக் குறித்த பெயர்கள் சில மக்களையுணர்த்தும் பெயர்கள் போலவும் சில அஃறிணைப்பொருளை யுணர்த்தும் பெயர்கள் போலவும் இருப்பினும் மக்களையும் அஃறிணைப் பொருளையும் விட்டுத் தெய்வத்தையே குறித்துணரும்படி செய்தலுமாம் என்க. அவ்வாறு உணர்த்தலால் 'பெண்மை சுட்டிய' எனவும் 'தெய்வஞ்சுட்டிய' எனவுங் கூறினர். இங்குக் கூறிய பெண்மைப் பெயர் மகடூஉப் பெயர் போன்றதன்றென்பார் "ஆண்மைதிரிந்த" என்னு மடை கொடுத்து விலக்கினர் என்க. (தொடரும்)

---

**கையறவு.**

சங்கப் பேரன்பரும், சைவ சித்தாந்தப் பேரறிஞரும், சித்த மருத்துவ வல்லுநரும் ஆய கொரடாச்சேரி அருட்டிரு. வாலையானந்த அடிகளென்னும் சச்சிதானந்த சுவாமிகள் 18-10-58 சனிக்கிழமை இரவு பெரும் பிறிதாகி இறைவன் திருவடிப்பேறெய்தினர். அடிகள் தமிழ்நாட்டின் பண்டைய கலைகளில் வல்லுநராயும், அவைகளை நடைமுறையில் எளிமையாகக் கையாளும் திறம் பெற்றவராகவும் விளங்கினர். தமிழர் விழிப்புற்றுத் தம்மரிய பண்டைய கலைச் செல்வங்களைத் துருவி ஆயும் இக்காலத்தில் அடிகளின் பேரமைதி நிலை நம்மனோருக்குப் பேரிழப்பாகும். அவர்களின் மாணவர்களாகிய அறிஞர்களும் பெருமக்களும் அடிகள் மூலமாக அறிந்த உண்மைகளை நாட்டு மக்கள் அறியச் செய்தலே, அடிகட்குச் செய்யும் பெருந்தொண்டாகக் கருதுகிறோம். பொழிற்றொண்டர்.

# தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டாராய்ச்சி.

S. திருஞானசம்பந்தன் M. A.,
வரலாற்று விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

(முற்றொடர்ச்சி)

## 5. தட்சிணமேரு.

சிதம்பரத்திலுள்ள சிற்றம்பலத்திற்கே தட்சிணமேரு என்ற பெயர் உரியதென்றும் தஞ்சை இராசராசேச்சுர விமானத்திற்கு அப்பெயர் இல்லை என்றும் கட்டுரையாளர் கூறுகின்றார். இதுவும் உண்மைக்கு மாறானதோர் செய்தியாகும்.

தட்சிணமேருவிடங்கர் என்ற பெயர் இராசராசேச்சுரத்தில் சோமாஸ்கந்தராகிய தியாகராசப்பெருமானுக்கு வழங்கியுள்ளது என்பதும் நடராசமூர்த்திக்கு அப்பெயர் இல்லை என்பதும் முன்னர் விளக்கப்பட்டன. எனவே, நடராசப்பெருமான் எழுந்தருளியுள்ள தில்லைச் சிற்றம்பலத்திற்குத் தட்சிணமேரு என்ற பெயர் வழங்கியமைக்கு ஏது சிறிதும் இல்லை என்பதும் புலனாகும். ஆனால், 'சிற்றம்பலம் பொன்வேயப்பெற்ற பிறகு ஆன்றோர்கள் அதற்குத் தட்சிணமேரு என்று பெயர் வைத்திருக்கலாம்' என ஆராய்ச்சியாளர் கூறுகின்றார். இதனையும் ஆராய்வோம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிலவிய அப்பரடிகள் காலத்திற்கு முன்னரே தில்லைச் சிற்றம்பலம் பொன்வேயப் பெற்றிருந்தது என்பதை,

> 'முழுதும் வானுல கத்துள தேவர்கள்
> தொழுதும் போற்றியுந் தூயசெம் பொன்னினால்
> எழுதி மேய்ந்த சிற்றம்பலம்'

என்னும் அவ்வடிகளது கோயிற் குறுந்தொகைப் பாடலொன்றால் நன்கறியலாம்.

எனவே, அப்பரடிகள் காலத்திலும் அதற்குப் பின்னரும் விளங்கிய திருஞானசம்பந்த சுவாமிகள், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சுந்தரமூர்த்திகள், சேரமான் பெருமாள் நாயனார், திருவாதவூரடிகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி, திருமாளிகைத் தேவர் முதலான ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள், சேக்கிழாரடிகள், உமாபதி சிவாசாரியார், இரட்டைப் புலவர்கள், குமரகுருபர அடிகள் ஆகிய பெருமக்கள் தம் காலங்களில் தில்லைச் சிற்றம்பலத்திற்குத் தட்சிணமேரு என்ற பெயர் வழங்கியிருப்பின் அதனைத் தம் நூல்களில் தவறாமல் கூறியிருப்பார்கள். அவர்களுள் எவரும் அதனைக் குறிப்பிடவில்லை. எனவே, அப்பெரியோர்கள் நிலவிய காலங்களில் தில்லைச் சிற்றம்பலம் பொன்வேயப்பெற்ற பின்னர், அதற்குத் தட்சிணமேரு

என்ற பெயர்வைத்து வழங்கிவந்த ஆன்ரேர்கள் யாவர் என்பதை விளக்குவது கட்டுரையாளரது கடமையாகும்.

தில்லைத் திருக்கோயிலிலிருந்து அரசியலாரால் படி எடுக்கப் பெற்றுள்ள கல்வெட்டுகள் எல்லாம் வெளிவரின் தம் கருத்திற்கு ஆதாரம் கிடைக்கலாம் என்றும் கட்டுரையாளர் குறித்துள்ளனர்.

அக்கோயிலினுள்ள கல்வெட்டுக்கள் எல்லாம் பல ஆண்டு களில் அரசாங்கக் கல்வெட்டிலாகா அறிஞர்களால் படி எடுக்கப் பட்டிருக்கின்றன. அதிலிருந்து 232 கல்வெட்டுக்கள் கிடைத் துள்ளன. அவற்றுள், எழுபது கல்வெட்டுக்கள் 'தென்னிந் தியக் கல்வெட்டுக்கள்' (South Indian Inscriptions) என்ற புத்தகத் தொகுதிகளினும், ஒரு கல்வெட்டு 'எபிகிராபியா இண்டிகா' (Epigraphia Indica) என்ற கல்வெட்டாராய்ச்சி இதழினும் வெளிவந்துள்ளன. எஞ்சியுள்ள 161 கல்வெட்டுக்கள் இன்னும் வெளிவரவில்லை. அச்சிடப்பெற்றுள்ள 71 கல்வெட் டுக்களையும் ஆராய்ந்து பார்க்குங்கால், கட்டுரையாளர் சிற்றம் பலத்திற்குரியதாகக் கூறும் தட்சிணமேரு என்ற பெயர் அவற் றுள் ஒன்றிலேனும் காணப்படவில்லை. அன்றியும், வெளிவராத 161 கல்வெட்டுக்களையும் நன்காராய்ந்து அரிய வரலாற்றுக் குறிப்புக்கள் எழுதித் தம் ஆண்டு அறிக்கைகளில் வெளியிட் டுள்ள கல்வெட்டிலாகா அறிஞர்கள், தட்சிணமேரு என்ற பெயரைச் சிதம்பரக் கல்வெட்டுக்களில் பார்த்திருந்தால் அச் செய்தியைத் தவருமல் அவ்வறிக்கைகளில் குறித்திருப்பார்கள். அவர்கள் அங்ஙனம் குறிக்காமையால் தில்லைக் திருக்கோயிற் கல்வெட்டுக்களில் அப்பெயர் காணப்படவில்லை என்பது தெள்ளிது. எனவே, வெளிவராத கல்வெட்டுக்களிலிருந்து தம் முடிவிற்கு ஆதாரம் கிடைக்கலாம் என்று கட்டுரையாளர் கூறுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை.

ஒட்டக்கூத்தரது தக்கயாகப்பரணியினுள்ள

'நீடிய எண்டிசை நீழல்வாய்ப்ப
நேரிய தெக்கிண மேருவென்னப்
பீடிகை தில்லை வனத்தமைத்த
பெரிய பெருமாளை வாழ்த்தினவே'

என்ற தாழிசை சிதம்பர விமானத்திற்குத் தக்கணமேரு என்ற பெயர் வைக்கப்பட்டிருத்தலை எடுத்துக்காட்டுமெனக் கட்டுரை யாளர் எழுதியுள்ளனர். இதில் சிதம்பரத்திலுள்ள விமானத் தைப்பற்றி ஒட்டக்கூத்தர் ஒன்றுமே கூறவில்லை; ஆனல், இரண்டாங் குலோத்துங்க சோழன் சிதம்பரத்தில் தட்சிண மேருபோல ஒரு பீடிகை அமைத்த செய்தியைக் குறிப்பிட

டுள்ளனர். தக்கயாகப்பரணி உரையாசிரியர் பீடிகைக்கு 'ஸ்ரீ பீடம்' எனப்பொருள் எழுதியுள்ளனர். ஸ்ரீ பீடம் என்பது கோயில்களிலுள்ள பலிபீடமேயாம் என்பது கல்வெட்டுக்களால் * தெளிவாகப் புலப்படுகின்றது. எனவே, 'தில்லை நகர் சிறப்புடைத்தாகத் திருமுடிசூடிய' இரண்டாங் குலோத்துங்க சோழன் தில்லையம்பதியில் திருப்பணி புரிந்தபோது தட்சிணமேருபோல ஒரு பலிபீடம் அமைந்ததையே இத் தாழிசை உணர்த்துதல் அறியற்பாலதாகும். அப்பலிபீடத்திற்குக் கூட அவன் தட்சிணமேரு என்று பெயர் வைக்கவில்லை என்பது இதிலுள்ள உவமையணியால் பெறப்படுகின்றது. இதனைப் 'பீடிகைக்கு மேரு உவமை' என்னும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களது குறிப்பும் வலியுறுத்துதல் காணலாம்.

இனி, பீடிகை என்பதற்கு விமானம் என்னும் பொருள் உண்டு என்று கட்டுரையாளர் கூறுவதையும் ஆராய்வோம்.

தக்கயாகப்பரணியில் 'பூத நாயகர்' என்று தொடங்கும் 138ஆம் தாழிசையில் காணப்படும் 'விமான பீடிகை' என்ற தொடர்க்குக் கோயிற் பலிபீடம் என உரையாசிரியர் பொருள் எழுதியுள்ளனர்; எனவே, விமானம் என்பது கோயிலையும் பீடிகை என்பது பலிபீடத்தையும் உணர்த்துதல் காண்க. ஆகவே, விமானம் வேறு, பீடிகை வேறு என்பது நன்கு தெளியப்படும். விமானம் கோயிற் கருவறையின் மேலே உயர்ந்துள்ள பகுதியையும் குறிக்கும். பீடிகை என்பது பீடத்தைக் குறிக்குமேயன்றி விமானத்தைக் குறிக்காது.

திருக்கோயில்களில் ஸ்ரீ விமானமும் ஸ்ரீ பீடமும் வெவ்வேறு இடங்களில் அமைந்திருத்தலை இந்நாளிலும் காணலாம். இவை இரண்டும் கோயிலில் வெவ்வேறு இடங்களில் உள்ளவை என்பதை மூன்றும் இராசராச சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றுலும் நன்குணரலாம். அது,

(1) 'ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு உ௰ஙு-வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் திரு மேற்கோயில் வீற்றிருந்த எம்பெ (2) ருமான் கோயில் ஸ்ரீ விமானமும் திரு அர்த்த மண்டபமும் திருமண்டபமும் சோபானமும் ஸ்ரீ பீடமும் இவ்வூர்ப் பட்டியர்போயன் மணியன் பெருங்கன் செய்வித்தான் உஹரி:'

---

* South Indian Inscriptions, rool, VII, No. 437; Ins. 135 of 1919.

(3) ‘திருமன்னு ஸ்ரீ ராசராசற்கியாண்டு சென்ற விருபத்து
மூன்றுவதிற் செந்தளிர்சூழ்
மருமன்னும் பொழில் திருமாகறல் திருமேற்கோயில்
மன்னி வீற்றிருந்த பெருமாளுக்கு மண்மேற்

(4) கருமன்னு சீவிமான மர்த்தமண்டப மேர்கலந்த
மண்டபத்தொடு சோபானஞ் சீபீடம்
தருமன்னுங் கொடைப்பட்டியர் போயன் மணியன்
தரும்பெருங்கன் செய்வித்தான் தரும நிலைபெறவே’*
— என்பதாம்.

இக்கல்வெட்டிலுள்ள முதற்பகுதி உரைநடையாகவும் இரண்டாம் பகுதி செய்யுளாகவும் உள்ளன. இவ்விரண்டு பகுதிகளாலும் ஸ்ரீ விமானம் வேறு, ஸ்ரீபீடம் வேறு என்பதும், அவை கோயிலில் வெவ்வேறு இடங்களில் இருப்பவை என்பதும் நன்கு வெளியாதல் அறியத்தக்கது. எனவே, ஸ்ரீ பீடம் எனப்பொருள் படும் பீடிகை வேறு, விமானம் வேறு என்பது உறுதியாதல் காண்க. ஆகவே, கட்டுரையாளர் பீடிகைக்கு விமானம் என்னும் பொருள் உண்டு என்று கூறுவது சிறிதும் பொருந்தவில்லை. எனவே, தக்கயாகப்பரணியிலிருந்து காட்டப்பெற்ற தாழிசையும் கட்டுரையாளரின் கருத்தினை ஆதரிக்காமல் அதற்கு முரணாக இருத்தல் உணரற்பாலது. இதுகாறும் விளக்கியவற்றால் சிதம்பரத்திலுள்ள சிற்றம்பலத்திற்குத் தட்சிணமேரு என்ற பெயர் என்றும் வழங்கியதில்லை என்பது தெள்ளிதிற் புலனாதல் காண்க.

இனி, தஞ்சை இராசராசேச்சுரத்திலுள்ள தியாகராசப் பெருமானுக்குத் தட்சிணமேரு விடங்கர் என்ற பெயருள்ளமை அக்கோயிற் கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றது. ஆகவே, அப்பெருமான் எழுந்தருளியுள்ள கோயில் விமானத்திற்கும் தட்சிணமேரு என்ற பெயர் வழங்கியது என்பது திண்ணம்.

தஞ்சைப் பெருவுடையாருலா நூன்முகத்தில் மகாமகோபாத்திய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள், ‘இங்கேயுள்ள விமானம் தட்சிணமேரு என்றும் உத்தம விமானம் என்றும் வழங்கப்படும்’ என எழுதியிருப்பதும் ஈண்டுணரத் தக்கதாகும். எனவே, தட்சிணமேரு என்ற பெயர், தஞ்சை இராசராசேச்சுரத்தின் விமானத்திற்கே உரியது என்பது தெள்ளிது.

(தொடரும்)

* S. I. I., vol. VII, No. 437.